
ISBN:978-81-687049-7-8

108

செந்தமிழறிஞர்கள்

கவிமணி
தேசிக விநாயகம்பிள்ளை





பகுப்பும் தொகுப்பும்
முனைவர் சு இராமலிங்கம்

NSR 100 Educational Trust
[An ISO 9001 - 2015 Certified]
AD-13,5th Street, Anna Nagar West, Chennai - 600 040
www.nasubbureddiar100.in

அண்ணா நூற்றாண்டு நூலகம்
ANNA CENTENARY LIBRARY
DIRECTORATE OF PUBLIC LIBRARIES SCHOOL EDUCATION DEPARTMENT

https://www.annacentenarylibrary.org/pages/view/43---%E0%AE%95%E0%AE%B5%E0%AE%BF%E0%AE%AE%E0%AE%A3%E0%AE%BF-%E0%AE%A4%E0%AF%87%E0%AE%9A%E0%AE%BF%E0%AE%95-%E0%AE%B5%E0%AE%BF%E0%AE%A8%E0%AE%BE%E0%AE%AF%E0%AE%95%E0%AE%AE%E0%AF%8D--1876

செந்தமிழ்சிற்பிகள்

கவிமணி-தேசிக-விநாயகம் *(1876 - 1954)*



கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை 20ம் நூற்றாண்டில் குமரி மாவட்டத்திலுள்ள தேரூரில் வாழ்ந்த ஒரு புகழ் பெற்ற கவிஞர். பக்திப் பாடல்கள், இலக்கியம் பற்றிய பாடல்கள், வரலாற்று நோக்குடைய கவிதைகள், குழந்தைப் பாடல்கள், இயற்கைப் பாட்டுக்கள், வாழ்வியல் போராட்ட கவிதைகள், சமூகப் பாட்டுக்கள், தேசியப் பாட்டுக்கள், வாழ்த்துப் பாக்கள், கையறு நிலைக் கவிதைகள், பல்சுவைப் பாக்கள்... என விரிந்த தளத்தில் செயல்பட்டவர்.

வாழ்க்கைக் குறிப்பு

சிவதாணுப்பிள்ளை-ஆதிலட்சுமி தம்பதியர்க்கு இரண்டு

பெண் குழந்தைகளை அடுத்து மூன்றாவதாக தேசிக விநாயகம் பிள்ளை பிறந்தார். இரண்டு பெண்களுக்கு பின் பிறந்த ஆண் குழந்தைக்கு தான் வணங்கும் தேசிக விநாயகரின் பெயரை வைத்தார் சிவதாணுப்பிள்ளை. ஒன்பதாவது வயதில் தன் தந்தையை இழந்தார். எம்.ஏ. படித்த கவிமணி பின் ஆசிரியர் பயிற்சி படித்து தான் படித்த பள்ளியிலேயே ஆசிரியர் ஆனார். உமையம்மை எனும் பெண்ணை 1901 ல் மணம் முடித்தார். நாஞ்சில் நாட்டார் தன் மனைவியை குட்டி, பிள்ளாய் என்று அழைத்து கொண்டிருந்த நாட்களில் கவிமணி தன் மனைவியை தாயி என்று மரியாதையுடன் அழைப்பார். குழந்தைப்பேறு இல்லாத கவிமணி தனது அக்காள் மகன் சிவதாணுவை தனது மகன் போலவே வளர்த்தார்.

ஆசிரியர் பணி

நாகர்கோவிலில் உள்ள கோட்டார் ஆரம்பப்பள்ளி, நாகர்கோவில் ஆசிரியர் பயிற்சிப்பள்ளி மற்றும் திருவனந்தபுரம் பெண்கள் கல்லூரி போன்றவற்றில் ஆசிரியராக 36 ஆண்டுகள் பணிபுரிந்தார்.

மொழிபெயர்ப்பாளர்

எட்வின் ஆர்னால்டின் 'ஆசிய ஜோதி' யைத் தமிழில் தழுவி எழுதினார். பாரசீகக் கவிஞர் உமர் கய்யாம் பாடல்களைத் தழுவி தமிழில் எழுதினார்.

ஆராய்ச்சியாளர்

ஆராய்ச்சித் துறையிலும் தேசிக விநாயகம் பிள்ளை பல அரிய பணிகளை ஆற்றியிருக்கிறார். 1922-இல் 'மனோன்மணியம் மறுபிறப்பு' என்ற திறனாய்வுக் கட்டுரையை எழுதினார். சென்னை பல்கலைக்கழகத்தின் தமிழ்ப் பேரகராதி உருவாக்கத்தில் மதிப்பியல் உதவியாளராக இருந்தார். கம்பராமாயணம் திவாகரம், நவநீதப் பாட்டியல் முதலிய பல நூல்களின் ஏட்டுப் பிரதிகளைத் தொகுத்திருக்கிறார்.'காந்தளூர்ச்சாலை' பற்றிய ஆய்வு நூலை எழுதினார்.

விருதுகள்

24 டிசம்பர் 1940 ல் சென்னை பச்சைப்பன் கல்லூரியில் தமிழவேள் உமாமகேசுவரம் பிள்ளை அவர்கள் கவிமணி என்ற பட்டம் வழங்கினார்.1943 ல் அண்ணாமலை அரசர் ஆத்தங்குடியில் பொன்னாடை போர்த்தி கௌரவித்தார். பெரும்

பொருள் வழங்க முன் வந்தபோது அதை வாங்க மறுத்து விட்டார். 1954 ல் கவிமணிக்கு தேரூரில் நினைவு நிலையம் அமைக்கப்பட்டது. அக்டோபர் 2005 இல் இந்திய அரசு முத்திரை வெளியிட்டுச் சிறப்பித்தது.

கவிமணியின் நூல்கள்

அழகம்மை ஆசிரிய விருத்தம்
ஆசிய ஜோதி , (1941)
மலரும் மாலையும், (1938)
மருமக்கள்வழி மான்மியம், (1942)
கதர் பிறந்த கதை, (1947)
உமார் கய்யாம் பாடல்கள், (1945)
தேவியின் கீர்த்தனங்கள்
குழந்தைச்செல்வம்
கவிமணியின் உரைமணிகள்

(😊)(😊)(😊) @@@@@@@@@@ (😊)(😊)(😊)

யாமறிந்த புலவரிலே!
கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை



Kannan Natarajan
https://groups.google.com/g/mintamil/c/D0sKNxmfBJU

ஒளிரும் தமிழ்மணி,
நம் ஒப்பற்ற கவிமணி!

பத்தொன்பதாம் நூற்றாண்டில் பிறந்து இருபதாம் நூற்றாண்டில்
புகழ்பெற்று விளங்கிய கவிஞர்கள்;
சுப்பிரமணிய பாரதியார்
கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை
பாவேந்தர் பாரதிதாசன்

நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை

ஆகிய நால்வருமாவர். அவருள்;

பாரதி ஒரு விடுதலை இயக்கக் கவிஞர்;

பாவேந்தர் ஒரு திராவிட இயக்கக் கவிஞர்;

நாமக்கல்லார் ஒரு தேசிய இயக்கக் கவிஞர்.

ஆயின்,

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை ஓர் இயக்கம் சாரா இனிமைக் கவிஞர், எளிமைக் கவிஞர், உண்மைக் கவிஞர், உணர்ச்சிக் கவிஞர் எனக் கூறுதல் சாலப் பொருந்தும்.

"அழகு என்பதே உண்மை, உண்மை என்பதே அழகு" என்றார் ஆங்கிலக் கவிஞர் கீட்ஸ். கவிமணியின் பாடல்களில் உண்மையும் அழகும் கைகோர்த்துச் செல்வதை உணர முடியும்.

கரும்பினும் இனிமை பெற்ற கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையின் பாடல்கள் தமிழ் மக்களுக்குக் கிடைத்த பெருஞ்செல்வம், அரிய செல்வம், தெவிட்டாத அமிர்தம் என புகழ்வார் இரசிகமணி டி.கே.சி.

"தேசிக விநாயகத்தின் கவிப்பெருமை
தினமும் கேட்பது என் செவிப்பெருமை." எனப் புகழ்மொழி சூட்டுவார் நாமக்கல் கவிஞர்.

"இவரது உண்மையுள்ளம், உண்மைப் பாடல்களின் மூலமாய் உண்மை வித்துக்களைக் கற்பவர் மனத்தில் விதைத்து, உண்மைப் பயிரைச் செழித்தோங்கச் செய்கிறது. இவர் பாடல்களில் காணும் தெளிவும், இனிமையும், இவரது உள்ளத்திலேயுள்ள தெளிவு, இனிமை முதலிய சிறந்த இயல்புகளின் நிழற்படமேயாகும்," என்பார் பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை.

"உள்ளத்துள்ளது கவிதை - இன்பம்
உருவெடுப்பது கவிதை

தெள்ளத் தெளிந்த தமிழில் - உண்மை
தெரிந்துரைப்பது கவிதை."

என்னும் கவிமணியின் கவிதை பற்றிய விளக்கம் அவரின் கவிதைகளுக்கு நன்கு பொருந்துவதாகும்.

தேசிக விநாயகம் கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலை அடுத்த தேரூரில் 1876 சூலை 27ம் நாள் வேளாளர் குலத்தில் சிவதாணுப்பிள்ளை - ஆதிலட்சுமியம்மாள் தம்பதியருக்கு மகனாகப் பிறந்தார். ஐந்து வயதில் தேரூர் ஆரம்பப்பள்ளியில் சேர்க்கப்பட்டார். அவர் வாழ்ந்து வந்த நாஞ்சில்நாடு மலையாள நாட்டின் ஒரு பகுதியாக இருந்ததால், பள்ளியில் மலையாள மொழி கற்க வேண்டியவரானார். எனினும் தேரூரை அடுத்த வாணன்திட்டிலிருந்த திருவாவடுதுறை மடத்தின் தலைவர் சாந்தலிங்கத் தம்பிரானிடம் தமிழ் இலக்கிய, இலக்கணங்களைக் கற்றுத் தேர்ந்தார். கவிபுனையும் ஆற்றலும் கைவரப் பெற்றார்.

ஆரம்பப் பள்ளிக் கல்விக்குப்பின் கோட்டாறு அரசுப் பள்ளியில் பயின்றார். திருவனந்தபுரம் ஆசிரியப் பயிற்சி நிறுவனத்தில் ஆசிரியர் பயிற்சி பெற்றார். முப்பத்தாறு ஆண்டுகள் பள்ளி ஆசிரியராகவும், கல்லூரி விரிவுரையாளராகவும் பணிபுரிந்து, 1931ல் ஓய்வு பெற்றார். ஓய்வுக்குப் பின் தம் மனைவியின் ஊராகிய புத்தேரியில் தங்கிக் கவிதை இயற்றுவதிலும் கல்வெட்டு ஆராய்ச்சியிலும் ஈடுபட்டார்.

பழந்தமிழ்ப்பண்பும், தமிழ் மணமும், புதுமைக் கருத்துக்களும் நிறைந்த பல பாடல்களைக் கவிமணி எழுதியுள்ளார். இப்பாடல்களின் தொகுப்பு "மலரும் மாலையும்" என்னும் நூலகாக வெளியிடப் பெற்றது.

ஆகிய இருகவிதை நூல்களும் ஆங்கில நூல்களைத் தழுவி எழுதப் பெற்றவை. நாஞ்சில் நாட்டில் நிலவிய மருமக்கள் தாய முறையினை எள்ளி நகையாடும் முறையில் எழுதப் பெற்ற நூல் "நாஞ்சில் நாட்டு மருமக்கள் வழிமான்மியம்" என்பதாகும். "தேவியின் கீர்த்தனங்கள்" கவிமணி இயற்றிய இசைப்பாடல்களின் தொகுப்பாகும். "கவிமணியின் உரை மணிகள்" என்ற நூல் அவரால் எழுதப்பெற்ற கட்டுரைகளின் தொகுப்பாகும்.

கவிமணி ஆங்கிலத்தில் எழுதிய வரலாற்று ஆய்வுநூல் "காந்தளூர் சாலை" ஆகும். தேசிக விநாயகம் பிள்ளையின் கவிபாடும் புலமையைப் பாராட்டிச் சென்னை மாகாணத் தமிழ்ச்சங்கம் 1940ல் "கவிமணி" என்னும் பட்டத்தை வழங்கிச் சிறப்பித்தது. மலரும் மாலையும் நூலில் இடம்பெற்றுள்ள பாடல்கள் மூலம் கவிமணியின்

நாட்டுப்பற்று
மொழிப்பற்று
இறைவழிபாடு
சாதிபேதம் கடிதல்
குழந்தைகளிடம் கொண்ட பற்று

ஆகியவற்றை அறியலாம்.

ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டதாகக் குதூகலித்த பாரதிக்கு சுதந்திர இந்தியாவில் வாழக் கொடுத்து வைக்கவில்லை. ஆயின் கவிமணி விடுதலை பெற்ற இந்தியாவில் ஏழாண்டுகள் வாழும் பேறு பெற்றார். "பெற்ற சுதந்திரத்தைப் பேணிக்காப்பது நமது கடமை என்றும், உரிமை வாழ்வின் பயனை நினையாது வாதினை விளைவித்துச் சண்டை செய்வது தேவையற்றது," என்றும் வலியுறுத்தினார். நம் நாட்டு மக்களுக்கு ஊக்கமும் உழைப்பும் வேண்டும்.

"உண்ணும் உணவுக்கும், உடுக்கும் உடைக்கும் அந்நியரை நம்பி வாழ்தல் கூடாது."

"பலதொழில்கள் செய்து பஞ்சப் பேயினைத் துரத்த வேண்டும்."

"அண்ணல் காந்தியினை அடியொற்றி வாழ்வோம்," என்பதைக் கீழ்காணும் கவிதை வலியுறுத்தும்.

"ஆக்கம் வேண்டுமெனில்- நன்மை
அடைய வேண்டுமெனில்
ஊக்கம் வேண்டுமப்பா - ஓயாது
உழைக்க வேண்டுமப்பா

உண்ணும் உணவுக்கும் - இடுப்பில்
உடுக்கும் ஆடைக்கும்
மண்ணில் அந்நியரை நம்பி
வாழ்தல் வாழ்வாமோ?

உண்ணும் உணவுக் கேங்காமல்
உடுக்கும் ஆடைக் கலையாமல்
பண்ணும் தொழில்கள் பலகாண்போம்
பஞ்சப் பேயைத் துரத்திடுவோம்
அண்ணல் காந்திவழி பற்றி
அகிலம் புகழ வாழ்ந்திடுவோம்."

கவிமணி தமிழுக்குத் தொண்டாற்றிய புலவரைப் போற்றுகிறார். தமிழ்நூல்களின் சிறப்புகளைக் கூறுகிறார். தமிழ்மொழி வளரப் பழைமையோடு புதுமையையும் வரவேற்கின்றார். தமிழில் புதுப்புதுத் துறைகளைத் தோற்றுவித்து வளர்க்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகிறார்.

"அறிவின் எல்லை கண்டோன், உலகை அளந்து கணக்கிட்டோன்," என வள்ளுவரையும்,
"நெல்லிக்கனியைத் தின்றுலகில் நீடுவாழும் தமிழ்க் கிழவி," என ஔவையாரையும்,

"இந்திர சாலமெல்லாம் கவியில் இயற்றிக் காட்டிடுவான்," எனக் கம்பரையும்,
"பாட்டைக் கேட்டு கிறுகிறுத்துப் போனேனேயடா அந்த கிறுக்கில் உளறுமொழி பொறுப்பாயடா," எனப் பாரதியையும் போற்றிக் கவியாரம் சூட்டுகிறார்.

மனத்தூய்மையின்றிச் செய்யும் இறைவழிப்பாட்டினால் பயனில்லை என்பது கவிமணியின் கருத்து. இதனை வலியுறுத்தும் பாடல்:

"கண்ணுக் கினியன கண்டு - மனதைக்
காட்டில் அலைய விட்டு
பண்ணிடும் பூசையாலே - தோழி
பயனொன்றில்லையடி
உள்ளத்தில் உள்ளானடி - அது நீ
உணர வேண்டும் அடி
உள்ளத்தில் காண்பாயெனில் - கோயில்
உள்ளேயும் காண்பாயடி."

கவிமணி தம் கவிதைகளில் சாதிபேதங்களைச் சாடுகிறார். "சாதியிரண்டொழிய வேறில்லை," என்றார் ஔவையார். சாதி இறைவனால் வகுக்கப்படவில்லை. மக்களின் கற்பனையே. பிறர்க்காக உழைப்பவர் உயர்ந்தவர். தன்னலம் பேணுவோர் தாழ்ந்தவர். இதனை,

"மன்னுயிர்க்காக உழைப்பவரே - இந்த
மாநிலத் தோங்கும் குலத்தினராம்
தன்னுயிர் போற்றித் திரிபவரே - என்றும்
தாழ்ந்த குலத்தில் பிறந்தோர் அம்மா."

எனப் பாடுகிறார்.

கவிமணி ஒரு தலைசிறந்த குழந்தைக் கவிஞர். இவர் குழந்தைகளுக்காகத் தாய்மார் பாடும் தாலாட்டுப் பாடல்களையும், குழந்தைகள் தாமே பாடி மகிழத்தக்க எளிய

அழகிய பாடல்களையும் பாடியுள்ளார். காக்கை, கோழி முதலிய பறவைகளைக் குழந்தை விளித்துப்பாடும் பாடல்கள் சுவைமிக்கன.

காக்காய்! காக்காய்! பறந்து வா
கண்ணுக்கு மை கொண்டு வா
கோழி! கோழி! கூவி வா
குழந்தைக்குப் பூக்கொண்டு வா

கோழி! கோழி! வா வா
கொக்கொக்கோ என்று வா
கோழி! ஓடி வாவா
கொண்டைப்பூவைக் காட்டு வா

சர். எட்வின் அர்னால்டு எழுதிய "The Light of Asia" என்னும் நூலைத் தழுவி எழுதப் பெற்ற அரிய நூல் "ஆசிய ஜோதி" ஆகும். இந்நூல் புத்தர் பெருமானின் வரலாற்றை விளக்குவது.

சுத்தோதனர் மனைவி மாயாதேவி இறைவன் தன் மூலமாகப் பிறக்க விருப்பதைக் கணவாகக் காண்கிறாள். "Dreamed a strange dream" என்பதை "எந்நாளும் காணாத கனவொன்று கண்டாள்" எனக் கவிமணி, மொழியாக்கம் எனத் தோன்றா வகையில் ஆக்கியுள்ள அருமை போற்றத்தக்கது. பாரசீகக் கவிஞர் உமர் கய்யாம் பாடல்களை எட்வர்ட் பிட்ஸ் ஜெரால்டு ஆங்கிலத்தில் ஆக்கியுள்ளார். கவிமணி ஆங்கில நூலைத் தழுவித் தம் நூலைப் படைத்துள்ளார். இப்பாடலின் தழுவலாக கவிமணி எழுதிய கீழ்க்கண்ட பாடல் அறிஞர்களின் பாராட்டைப் பெற்றது.

வெய்யிற்கேற்ற நிழலுண்டு
வீசும் தென்றல் காற்றுண்டு
கையில் கம்பன் கவியுண்டு
கலசம் நிறைய மதுவுண்டு
தெய்வகீதம் பலவுண்டு
தெரிந்து பாட நீயுண்டு
வையந் தருமிவ் வனமன்றி


வாழும் சொர்க்கம் வேறுண்டோ!

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை 78 ஆண்டுகள் நிறைவான வாழ்க்கை வாழ்ந்து 26.09.1954ல் இம் மண்ணுலக வாழ்வினை நீத்தார். வாழ்நாள் முழுவதும் தமிழ்மணி ஒலித்துக் கொண்டிருந்த கவிமணியின் நா ஓய்ந்தது. எனினும் அவர் பாடல்கள் செவிகளில் ஒலித்துக் கொண்டே உள்ளன.

முனைவர். ப.சுப்பிரமணியன்
நன்றி: தமிழ்மணி (தினமணி)

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

https://www.hindutamil.in/news/blogs/218369-10.html



தமிழக மறுமலர்ச்சிக் கவிஞர்

- தமிழ்நாட்டின் 20-ம் நூற்றாண்டின் மறுமலர்ச்சிக் கவிஞர்களுள் குறிப்பிடத்தக்கவர்களில் ஒருவரான கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை (Kavimani Desika Vinayagam

Pillai) பிறந்த தினம் இன்று (ஜூலை 27). அவரைப் பற்றிய அரிய முத்துக்கள் பத்து:

- குமரி மாவட்டம், தேரூரில் பிறந்தார் (1876). ஐந்து வயதில் தேரூர் ஆரம்பப் பள்ளியில் சேர்க்கப்பட்டார். ஒன்பதாவது வயதில் தந்தையை இழந்தார். திருவாவடுதுறை மடத் தலைவர் சாந்தலிங்கத் தம்பிரானிடம் தமிழ் இலக்கிய, இலக்கணங்களைக் கற்றுத் தேர்ந்தார். எம்.ஏ. பட்டம் பெற்றார்.

- திருவனந்தபுரம் ஆசிரியப் பயிற்சி நிறுவனத்தில் பயின்றார். கோட்டாறு, நாகர்கோவில் பாடசாலைகளில் ஆசிரியர், திருவனந்தபுரம் பெண்கள் கல்லூரியில் பேராசிரியர் என 36 ஆண்டுகள் கல்விப் பணியாற்றினார்.

- இவரது இலக்கிய வெளிப்பாட்டில் ஒரு அறிவியல் கண்ணோட்டம் பிரதிபலித்தது. நாட்டின் பண்டைய வரலாற்றை அறிந்து கொள்ளும் ஆர்வம் காரணமாக கல்வெட்டு ஆராய்ச்சிகளில் ஈடுபட்டார். சுதந்திர போராட்டத்தில் காந்தியத்துக்கு ஆதரவாகக் கவிதைகளை எழுதியதால் 'விடுதலைக் கவிஞர்' எனவும் போற்றப்பட்டார்.

- 'ஆங்கிலத்தில் உள்ளதுபோல தமிழில் குழந்தைப் பாடல்கள் இல்லையே என்றுதான் நான் பள்ளிப் பிள்ளைகளுக்கு எளிய நடையில் பாடல்கள் எழுதினேன்' எனக் குறிப்பிட்டுள்ளார்.

- 'மலரும் மாலையும்', 'ஆசிய ஜோதி', 'உமர்கய்யாம் பாடல்கள்', 'நாஞ்சில் நாட்டு மருமக்கள்வழி மான்மியம்', 'அழகம்மை ஆசிரிய விருத்தம்', 'கதர் பிறந்த கதை', 'குழந்தைச் செல்வம்' உள்ளிட்ட இவரது படைப்புகள் குறிப்பிடத்தக்கவை. இவரது 'தேவியின் கீர்த்தனங்கள்' என்ற இசைப்பாடல் தொகுப்பில் இடம் பெற்ற பல பாடல்களை, இசைக் கலைஞர்கள் மேடைகளில் விரும்பிப் பாடினார்கள்.

- இவரது சொற்பொழிவுகள் 'கவிமணியின் உரை மணிகள்' என்ற நூலாக வெளிவந்தது. சிறந்த மொழிபெயர்ப்பாளரான இவர் எட்வின் ஆர்னால்டின் 'தி லைட் ஆஃப் ஏஷியா' என்ற படைப்பைத் தழுவி 'ஆசிய ஜோதி' என தமிழில் எழுதினார். பாரசீகக் கவிஞர் உமர் கய்யாமின் ஆங்கிலத்தில்

மொழிபெயர்க்கப்பட்ட பாடல்களைத் தழுவி தமிழில் எழுதினார்.'மனோன்மணியம் மறுபிறப்பு' என்ற திறனாய்வுக் கட்டுரை எழுதியுள்ளார்.

- சென்னைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்ப் பேரகராதி உருவாக்கத்தில் மதிப்பியல் உதவியாளராகப் பணியாற்றினார். 'கம்பராமாயணம் திவாகரம்', 'நவநீதப் பாட்டியல்' உள்ளிட்ட பல நூல்களின் ஏட்டுப் பிரதிகளைத் தொகுத்துள்ளார். 'தேசியக் கவிஞர்', 'குழந்தைக் கவிஞர்', 'சமுதாயக் கவிஞர்', 'விடுதலைக் கவிஞர்', 'உணர்ச்சிக் கவிஞர்' என்றெல்லாம் போற்றப்பட்டார்.

- 'பைத்தியக்காரன்', 'மணமகள்', 'தாயுள்ளம்', 'வேலைக்காரன்', 'கள்வனின் காதலி', 'கண்ணின் மணிகள்', 'நன் நம்பிக்கை' ஆகிய திரைப்படங்களில் இவர் எழுதிய பாடல்கள் பயன்படுத்திக் கொள்ளப்பட்டன.

- 'தேசிய விநாயகத்தின் கவிப்பெருமை தினமும் கேட்பது என் செவிப்பெருமை' என நாமக்கல் கவிஞர் பாராட்டியுள்ளார். 1940-ல் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் உமாமகேஸ்வரம் பிள்ளை இவருக்கு 'கவிமணி' பட்டம் வழங்கினார்.

- இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற தமிழ்க் கவிஞர்களுள் ஒருவருமான கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை 1954-ம் ஆண்டு, 78-வது வயதில் மறைந்தார். இவர் பிறந்த ஊரில் நினைவு நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. இந்திய அரசு இவர் நினைவாக 2005-ல் தபால் தலை வெளியிட்டது.



- ராஜலட்சுமி சிவலிங்கம்

நூல்கள்

கவிதை

- அழகம்மை ஆசிரிய விருத்தம் (கவிமணி இயற்றிய முதல் நூல்)
- மலரும் மாலையும் (1938)
- கதர் பிறந்த கதை (1947)
- தேவியின் கீர்த்தனங்கள்
- குழந்தைச்செல்வம்

புனைவு

- நாஞ்சில்நாட்டு மருமக்கள்வழி மான்மியம் (1942)

மொழியாக்கம்

- உமார் கய்யாம் பாடல்கள் (1945)
- ஆசிய ஜோதி (1941)

கட்டுரை

- கவிமணியின் உரைமணிகள்
- தீண்டாதார் விண்ணப்பம்
- கவிமணி கட்டுரைகள் (தொகுப்பு: அ.கா. பெருமாள்), காவ்யா பதிப்பகம்

ஆய்வுநூல்

- காந்தளூர் சாலை

நினைவு நூல்கள்

- கவிமணி வரலாற்றாய்வாளர், அ.கா. பெருமாள், நியூசெஞ்சுரி புக் ஹவுஸ்

%E0%AE%9A%E0%AF%86%E0%AE%B2%E0%AF%8D%E0%AE%B5%E0%AE%AE%E0%AF%8D



கவிமணி சி.தேசிக விநாயகம் பிள்ளை
அவர்களுடைய
கவிதைத் தொகுதிகளிலிருந்து
திரட்டியது

பதிப்புரை

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களின் கவிதைகளில் சிறுவர் சிறுமியர்க் கேற்ற பாடல்கள் இத்தொகுதியில் இடம் பெற்றுள்ளன. இக் கவிதைகள், 'மலரும் மாலையும்' 'ஆசிய ஜோதி' முதலிய கவிதைத் தொகுதிகளில் ஏற்கெனவே வெளிவந்தவை. அவைகள் பெருந்தொகுதிகளாயிருத்தலால், பள்ளிச்சிறுவர் சிறுமியர்கள் எளிதில் பெற்று வாசிக்க இயலாதிருந்தது. கவிமணி அவர்களின் கவிதைகளை மாணவருலகமும் படித்துப் பயனுறவேண்டும் என்பது கருதி, இக் குழந்தைச் செல்வம்' இப்பொழுது வெளிவருகிறது.

குழந்தைகளுடன் வாழ்ந்து, குழந்தைகளுக்கான எளிய இனிய பாடல்களைப் பாடி அளித்து, தமிழ் நாட்டில் குழந்தைகளுக்கேற்ற பாடல்கள் வெளிவருவதற்கு வழிகாட்டியவர் நமது கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை அவர்களே. அவர்களுடைய வழியைப் பின்பற்றி, பலரும் இப்பொழுது குழந்தைப் பாடல்கள் பாடி வருகிறார்கள்.

குழந்தைகள் தாமே விரும்பிக் கற்கும் வண்ணம் அத்தனை எளிமையுடனும் இனிய ஓசையுடனும் இப் பாடல்கள் அமைந்துள்ளன.

குழந்தைகள் பாடி நடிப்பதற்கும் இப்பாடல்களில் பல ஏற்றவைகளாகும். குழந்தைப் பாடல்கள், 'மழலை மொழி', 'இயற்கை இன்பம்' 'காட்சி இன்பம்', 'கதைப் பாட்டு','பஞ்சாமிர்தம்' என ஐந்து பகுதிகளாகத் தொகுக்கப்பெற்றிருக்கின்றன.

செந்தமிழ் நாட்டுச் சிறுவர் சிறுமியர் அனைவரும் கவிமணி அவர்கள் தரும் 'குழந்தைச் செல்வத்தை'ப் பெற்றுப் படித்து மகிழ்வார்களாக.

பாரி நிலையம்
8-4-54

@@@@@@@@@@@@@@@@@@

பொருளடக்கம்

மழலை மொழி


இயற்கை இன்பம்

காட்சியின்பம்

கதைப் பாட்டு


பஞ்சாமிர்தம்

அறிவியக்க இடம்



கவிமணி தேசிகவினாயகம் பிள்ளையின் பங்களிப்பை ஒட்டுமொத்தமாக இலக்கியம், ஆய்வு ஆகிய இருதளங்களில் தொகுத்துக்கொள்ளலாம்

இலக்கியம்



- கவிமணி பாரதிக்குப் பின்னர் உருவான இரண்டு கவிதைமரபுகளில் நாமக்கல் கவிஞர் மரபு என அடையாளப்படுத்தப்படும் மரபைச் சேர்ந்தவர். தேசிய இயக்க பார்வை, எளிய மொழி, எளிய அமைப்பு, நாட்டாரியல் சார்பு கொண்ட கவிதைகள் கவிமணி தேசிகவினாயகம் பிள்ளை எழுதியவை.
- கவிமணி தமிழின் முதல் குழந்தைக் கவிஞர். குழந்தைப் பாடல்களுக்குரிய எளிமையான யாப்புமுறையை தமிழுக்கு அறிமுகம் செய்தவர். இதற்கு தமிழ் மரபிலக்கியத்தில் உள்ள ஆசிரியப்பா போன்ற வடிவங்களையும் நாட்டார்ப்பாடல்களின் ஒலியமைவையும் அவர் இணைத்தார். பின்னாளில் எழுதிய அழ.வள்ளியப்பா, பெ.தூரன், பூவண்ணன் போன்றவர்கள் அவருடைய வழிவந்தவர்கள்
- மொழிபெயர்ப்பாளரான கவிமணி இலக்கியத்தில் முன்னோடி முயற்சிகளைச் செய்தவர். அவருடைய ஆசியஜோதி ஒரு குறிப்பிடத்தக்க ஆக்கம்
- நாஞ்சில்நாட்டு மருமக்கள்வழி மான்மியம் நாட்டார் பாடல் வடிவில் அமைந்தாலும் சிறந்த புனைவிலக்கியம். தமிழ் வட்டாரப்புனைகதையின் முதல் வடிவங்களில் ஒன்று. சுந்தர ராமசாமி, நாஞ்சில்நாடன் உட்பட பலர் அந்த மரபில் வந்தவர்கள்

ஆய்வு

- கல்வெட்டாய்வில் கவிமணி முன்னோடியானவர். கல்வெட்டுகளைப் படியெடுத்து, இலக்கியச் சான்றுகளுடன் இணைத்து பொருள்கொள்வதில் அவர் ஆரம்பகால முறைமையை உருவாக்கினார். சோழர்கால கல்வெட்டுக்களை அவர் ஆராய்ந்த முறை கே.கே.பிள்ளை போன்றவர்களுக்கு முன்னுதாரணமாக அமைந்தது
- கல்வெட்டுச் சான்றுகளை கொண்டு இலக்கியத்தை காலக்கணிப்பு செய்வது, உள்ளடக்கத்தை ஆய்வு செய்வது ஆகியவற்றில் கவிமணி வழிகாட்டியாக அமைந்தார். எஸ்.வையாபுரிப்பிள்ளை, கே.என்.சிவராஜ பிள்ளை, மு.சண்முகம் பிள்ளை, கே.கே.பிள்ளை போன்றவர்கள் அவருடைய வழிவந்தவர்கள்.
- வரலாற்றாய்வுக்கு நாட்டாரியலை ஆய்வுத்தரவாகக் கொள்ளலாம் என வழிகாட்டியவர் கவிமணி. பின்னாளில் அ.கா.பெருமாள் போன்றவர்கள் அவருடைய வழிமுறைகளை பின்தொடர்ந்தனர்.

நாட்டுடைமை

கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையின் படைப்புகள் 1998-ல் தமிழக அரசால் நாட்டுடைமையாக்கப்பட்டன.

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையின் வாழ்க்கை தத்துவங்கள் எளிமை, பக்தி, சமூக சீர்திருத்தம் மற்றும் இயற்கையை ரசித்தல் ஆகியவற்றை மையமாகக் கொண்டவை. மென்மையான கவிதைகள் மூலம் வாழ்வின் ஆழமான உண்மைகளை போதித்தவர்.

கவிமணியின் முக்கிய வாழ்க்கை தத்துவங்கள்:

- **உள்ளத்து உள்ளது கவிதை**: கவிதை என்பது கற்பனை மட்டுமல்ல, அது உள்ளத்தில் தோன்றும் உண்மையான இன்ப உணர்வுகளின் வெளிப்பாடு என்பதை வலியுறுத்தினார்.
- **கடவுள் உள்ளத்தில் உள்ளார்**: பக்தி பாடல்கள் மூலம், மனிதன் கடவுளைத் தன்னுள் தேட வேண்டும், வெளி உலகில் அல்ல என்ற ஆன்மீக உண்மையை போதித்தார்.

- **சமூக சீர்திருத்தம்**: சாதிய பாகுபாடுகள் மற்றும் தீண்டாமைக்கு எதிராகக் குரல் கொடுத்தார், சமத்துவமான சமுதாயத்தை விரும்பினார்.
- **உழைப்பும் ஒற்றுமையும்**: நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும், சுதந்திரத்திற்கும் கடின உழைப்பும், மக்களின் ஒற்றுமையே முக்கியம் என்று நம்பினார்.
- **வாய்மையே உயர்வு**: மகாத்மா காந்தியின் மீது கொண்ட பற்றினால், ஹரிச்சந்திரன் கதையை வலியுறுத்தி, உண்மையைப் பேசுவதே உயர்ந்த பண்பு என வாழ்ந்தார்.
- **இயற்கை ரசனை மற்றும் எளிமை**: குழந்தை உள்ளத்துடன் இயற்கையை ரசிப்பதும், எளிமையான வாழ்க்கையை வாழ்வதும் மன அமைதிக்கு வழிவகுக்கும் என்று கருதினார்.

இவரது கவிதைகள் மென்மையான இசைத்தன்மை மற்றும் எளிமையான நடையில் வாழ்வின் அறநெறிகளைப் போதிப்பவையாக அமைந்துள்ளன.

முத்துக்கமலம்
பன்னாட்டுத் தமிழ் மின்னிதழ்
ISSN: 2454-1990

http://www.muthukamalam.com/essay/literature/p57.html

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை பாடல்கள்

உ. தாமரைச்செல்வி.

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த இணையற்ற கவிஞர். பள்ளி ஆசிரியர் மற்றும் கல்லூரி விரிவுரையாளராகப் பணியாற்றிய இவர் கவிஞராக மட்டும் அடையாளம் காணப்படுபவரில்லை. மொழிபெயர்ப்பாளர், ஏட்டுச் சுவடிகளின் தொகுப்பாளர், ஆய்வாளர், நூலாசிரியர் என்று இவருடைய வேறு சில சிறப்புகளும் இவருக்கு உண்டு. இவர் எழுதிய பாடல்கள் அனைத்தும் குறிப்பிட்ட எல்லைக்குள் முடங்கிக் கிடக்கவில்லை. இவரது கவிதைப் படைப்புகள் பரந்து விரிந்த கவிதை உலகில் பக்திப் பாடல்கள், இயற்கைப் பாடல்கள், இலக்கியப் பாடல்கள், குழந்தைப் பாடல்கள், வரலாற்றுப் பாடல்கள், வாழ்வியல் போராட்டப் பாடல்கள், சமூகப் பாடல்கள், தேசியப் பாடல்கள், வாழ்த்துப் பாடல்கள், கையறுநிலைப் பாடல்கள், பல்சுவைப் பாடல்கள் மற்றும் பிற

மொழியைத் தழுவி எழுதிய மொழிபெயர்ப்புப் பாடல்கள் என்று பல்வேறு வகைப்பாடுகளில் பல விழுதுகளைக் கொண்டு பன்னெடுங்காலத்திற்கும் நிலைத்து நிற்கும்படி வேரூன்றி இருக்கின்றன.

கவிமணியின் பாடல் சிறப்புக்கு அவரது பாடலில் அமைந்துள்ள எளிமையான சொல்லாடல், எளிமையாக விளக்கும் தன்மை, எவரும் அறிந்து கொள்ளும் அமைப்பு என இவரது பாடல்கள் அனைத்துமே அகராதி தேடாதவை. எக்காலத்திற்கும் ஏற்றவை. அவருடைய பாடல்களை நாம் முழுமையாக இங்கு ஆய்வு செய்யப் போவதில்லை. அந்தப் பாடல்களில் சில துளிகளை எடுத்துச் சுவைத்துப் பார்க்கப் போகிறோம். தேனின் சில துளிகள் நாக்கை இனிப்பாக்கி உடலைக் குளிர்ச்சியாக்கி விடும். கவிமணியின் சில பாடல்களைப் படித்தாலோ அல்லது கேட்டாலோ போதும், நமக்கு அதன் சுவை நம் மனதை நிறைவாக்கி விடும்.

பக்திப் பாடல்கள்

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை இறைவழிபாட்டுக்கான பல்வேறு பாடல்களை எழுதியிருக்கிறார். இறைவழி நம்பிக்கை மனதில் மிகப்பெரும் நம்பிக்கையை உருவாக்கும் என்று எளிமையான முறையில் தன் கவிதைகளின் வாயிலாக மன அமைதிக்கும், ஆன்மிக நம்பிக்கைக்கும் வழிகாட்டுகிறார். இப்பாடல்களில் "கோவில் வழிபாடு" எனும் பாடலை நாம் இங்கு எடுத்துக் கொள்வோம். இப்பாடல் இரு தோழியர்கள் பேசிக் கொள்வதாகப் பாடப்பட்டிருக்கிறது. இரு தோழிகளுள் ஒருவர் கோயில் வழிபாடு பல செய்தும் கடவுளைக் காண முடியவில்லை என்கிற செய்தியைச் சொல்கிறார்...

கோவில் முழுதுங் கண்டேன் - உயர்
கோபுரமேறிக் கண்டேன்
தேவாதி தேவனை யான் - தோழி
தேடியும் கண்டிலனே

தெப்பக் குளங் கண்டேன் - சுற்றித்
தேரோடும் வீதி கண்டேன்
எய்ப்பில் வைப்பா மவனைத் - தோழி
ஏழை நான் கண்டிலனே

சிற்பச் சிலைகள் கண்டேன் - நல்ல
சித்திர வேலை கண்டேன்

அற்புத மூர்த்தி யினைத் - தோழி
அங்கெங்குங் கண்டிலனே

பொன்னும் மணியுங் கண்டேன் - வாசம்
பொங்கு பூ மாலை கண்டேன்
என்னப்பன் எம்பி ரானைத் - தோழி
இன்னும் யான் கண்டிலனே

தூப மிடுதல் கண்டேன் - தீபம்
சுற்றி எடுத்தல் கண்டேன்
ஆபத்தில் காப்பவனைத் - தோழி
அங்கே நான் கண்டிலனே

தில்லைப் பதியுங் கண்டேன் - அங்கு
சிற்றம்பலமுங் கண்டேன்
கல்லைக் கனி செய்வோனைத் - தோழி
கண்களாற் கண்டிலனே

இப்பாடலில் கோயில், கோயிலைச் சுற்றி இருக்கும் வளாகங்கள், குளங்கள், தேரோட்டம் கண்ட தெருக்கள், கோயிலில் அழகூட்டப்பட்ட சிலை, அச்சிலைக்குச் செய்யப்பட்ட சில வழிபாடுகள் என்று அனைத்தும் கண்டு விட்டேன். ஆனால், எந்த இடத்திலும் இறைவனைக் காணவில்லை என அவள் வருத்தமுற்றுப் பாடுகிறாள்.

இதைக் கேட்ட அவளது தோழி

கண்ணுக் கினிய கண்டு - மனதைக்
காட்டில் அலைய விட்டுப்
பண்ணிடும் பூசை யாலே - தோழி
பயனொன் றில்லையடி.

உள்ளத்தி லுள்ளானடி - அது நீ
உணர வேண்டு மடி
உள்ளத்தில் காண்பாய் எனில் - கோவில்
உள்ளேயும் காண்பாயடி.

என்று அவளுக்கு பதிலளிக்கிறாள்.

கண்ணிற்கு இனிமையாய்க் காட்சி தரும் வெளிக்காட்சிகளைக் கண்டு மயங்கி விடுகிறாய். அதையே மனதில் கொண்டு, மனதை அலைய விட்டு அதன் பிறகு செய்யப்படும் வழிபாட்டினால் பயன் எதுவும் இல்லை. இறைவன்

ஒவ்வொருவர் உள்ளத்திலுமிருக்கிறான். அதை முதலில் உணர வேண்டும். அப்போதுதான் கோயிலிலுக்குள்ளே குடி கொண்டிருக்கும் இறைவனைக் காணமுடியும் என்று மற்றொரு தோழி பதிலளிப்பதாக இந்தப் பாடல் அமைந்திருக்கிறது.

வெளித்தோற்றத்தைக் கண்டு ஏமாற்றமடைந்து விடக்கூடாது. உள்ளுக்குள்ளும், உள்ளத்திற்குள்ளும் இருக்கும் இறைவனை நினைத்தே நம் செயல்பாடுகள் இருக்க வேண்டும். அதுதான் இறைவனைக் காண்பதற்கான வழி என்று கவிமணி தனது பாடலில் மிக எளிமையாக விளக்கியிருக்கிறார். இந்தப் பக்திப் பாடல்களைப் போல கவிமணி, பல பக்திப் பாடல்களில் இறைவனைத் தேடும் முறையையும், வழிபடும் நடைமுறையையும் விளக்கிக் காட்டியிருக்கிறார்.

இயற்கைப் பாடல்கள்

கவிஞராய் இருப்பவர்கள் இயற்கையைப் போற்றி வணங்குவது மட்டுமில்லை, அதன் சிறப்பை வியந்து போற்றுவார்கள். அதை மற்றொன்றுடன் ஒப்பிட்டு மாற்றுவார்கள். அதை தன்னுடன் கூப்பிட்டு மகிழ்வார்கள். இயற்கையை எழுதாத கவிஞனே இல்லை. இதற்குக் கவிமணியும் விதிவிலக்கில்லை.

இயற்கை எழில் கொஞ்சும் நாஞ்சில் நாட்டில் பிறந்த கவிமணி, இயற்கை குறித்து பல பாடல்களைப் படைத்திருக்கிறார். அவற்றில் ஒன்றாக இங்கு ஆறு எனும் தலைப்பில் பாடிய பாடலை மட்டும் நாம் இங்கே காண்போம்.

கல்லும் மலையும் குதித்து வந்தேன் - பெருங்
காடும் செடியும் கடந்து வந்தேன்;
எல்லை விரிந்த சமவெளி - எங்கும் நான்
இறங்கித் தவழ்ந்து தவழ்ந்து வந்தேன்.

ஆயிரம் காலால் நடந்து வந்தேன் - நன்செய்
அத்தனையும் சுற்றிப் பார்த்து வந்தேன்;
நேயமுறப் புன்செய்க் காட்டிலும் - அங்கங்கு
நீரை இறைத்து நெடுக வந்தேன்

மாங்கனி தேங்கனி வாரிவந்தேன் - நல்ல
வாச மலர்களும் அள்ளி வந்தேன்;
தீங்கரும் பாயிரம் தள்ளி வந்தேன் - மிகத்
தேனும் தினையுமே சேர்த்து வந்தேன்

அல்லும் பகலும் அலைந்து வந்தேன் - எங்கள்
ஆழி இறைவனைக் காண வந்தேன்;
நில்லும், எனக்கினி நேரமில்லை - இன்னும்
நீண்டவழி போக வேண்டும் அம்மா!

கல், மலை போன்ற பல்வேறு தடைகள் எதிர்ப்படும் போது அதைத் தாண்டிக் குதித்தும், சமவெளியில் சிறு குழந்தை போல் தவழந்தும் பயணம் செய்து செல்லும் ஆற்றின் பயணப்பாதையில் இருக்கும் நிலங்களில் பயிர் செய்யப்பட்டுள்ள அனைத்துப் பயிர்களையும் உயிர்ப்பித்துச் செல்கிறதாம். ஆற்றின் ஓட்டத்தில் பல்வேறு சுவையுள்ள கனிகளையும், வாசமுள்ள மலர்களையும் தன்னுடன் கொண்டு செல்வதாகவும், இறைவனான கடலைத் தேடிக் கலந்து விட நெடுந்தொலைவுப் பயணம் செய்ய வேண்டியிருப்பதால், இரவு பகல் என்று பாராமல் ஓடிக் கொண்டிருக்கும் ஆற்றுக்கு நின்று பேச நேரமில்லை என்று ஆற்றின் செயலையும், ஆற்றின் முடிவையும் எளிமையாகச் சொல்லும் இந்தப் பாடல் மனிதனின் வாழ்க்கைக்கும் ஒரு உதாரணமாக அமைந்திருக்கிறது.

மனிதர்களின் வாழ்க்கையும் இந்த ஆற்றைப் போன்றதுதான். ஆற்றைப் போல் மனிதர்களும் எதிர்ப்படும் தடைகளைத் தாண்டியும், சமநிலைகளில் தாழ்ந்தும், இந்தப் பூமியில் நம்மால் செய்யக் கூடியதைச் செய்து, நம் வாழ்க்கையை முடிந்த வரை பிறருக்குப் பயனுடையதாக்கி, முடிவில் இறைவனைச் சென்றடைவதுதான் மனித வாழ்க்கையின் மிகப்பெரும் தத்துவத்தை ஆற்றைக் கொண்டு உணர்த்தியுள்ளார்.

சமூகப் பாடல்கள்

மனிதர் வாழ்க்கையில் நிறம் மற்றும் தொழில் எனும் அடிப்படையிலான வேறுபாடுகள், சாதிகளாக, சமயங்களாகப் பிரிந்து சண்டையிட்டுக் கொள்ளும் அவல நிலையைப் போக்க வேண்டும். இதை இயற்கையுடன் இணைந்து வாழும் பிற உயிரினங்களைப் பார்த்துப் புரிந்து கொள்ள வேண்டும் என்றும் பல பாடல்களைப் பாடியிருக்கிறார்.

அவற்றில் ஒன்றாக அவர், பறவையைக் கண்டு பகுத்தறிவு கொண்டதாக ஒரு பாடலைப் பாடியிருக்கிறார். அந்தப் பாடல்;

சாதிச் சண்டையில்லை - ஓயாச்

சமயச் சண்டையில்லை;
வேத சாத்திரங்கள் - கூறும்
விதிவிலக்குமில்லை.

பட்டுடை வேண்டாம் - வயிரப்
பணிகள் பூணவேண்டாம்;
பொட்டிட வேண்டாம் - தலையில்
பூவும் சூட வேண்டாம்.

உள்ள துள்ளபடி - பேசி
உலகில் வாழ்ந்திடலாம்;
கள்ளம் கபடுகள் - இன்றிக்
காலம் போக்கிடலாம்.

பகுத்தறி வெதற்கோ? - பறவை
படைத்த நாள் ஈசன்
வகுத்தளித் திருக்கும் - இயற்கை
வாசனை போதாதோ?

நமனை எண்ணி எண்ணி - உள்ளம்
நடுநடுங்கிடாமல்,
அமைதி கண்டிடலாம் - நித்ய
ஆனந்தம் பெற்றிடலாம்.

சாதி, சமய வேறுபாடுகளால் சண்டை, சச்சரவுகள் என்று தங்களை அழித்துக் கொள்ளும் மனிதர்கள், பட்டுடைகள் அணிந்து, வயிரம் போன்ற விலையுயர்ந்த பொருள்களை அணிந்து, பொட்டும், பூவும் வைத்துக் கொண்டு, தங்களை உயர்ந்தவர்களாகக் காட்டிக் கொள்ள வேண்டியதில்லை. உள்ளதை உள்ளபடி பேசி, கள்ளங் கபடமின்றி காலத்தைக் கழிக்க வேண்டும். இதற்கான பகுத்தறிவைப் பறவைகளிடம் இருந்து கற்றுக் கொள்ள வேண்டும். இறைவன் இயற்கையாய் அளித்திருக்கும் இவ்வுலகில் எதைப் பற்றியும் பயம் கொள்ளாமல் அமைதி கொண்டு, தினமும் மகிழ்ச்சியாய் வாழ வேண்டும் என்று வலியுறுத்துகிறார்.

குழந்தைப் பாடல்கள்

கள்ளங்கபடமில்லாத குணம் குழந்தைகளிடம் மட்டும்தான் இருக்கும். கள்ளங்கபடமில்லாக் குழந்தைகளுக்கு கவிமணி

தேசிக விநாயகம் பிள்ளை பல குழந்தைப் பாடல்களை எழுதியுள்ளார். குழந்தைகளுக்காகத் தாய் பாடும் தாலாட்டுப் பாடல்களும், குழந்தைகள் தாமே பாடி மகிழத்தக்க எளிமையான பாடல்களும் என குழந்தைப் பாடல்களை அதிகமாக எழுதியுள்ளார்.

தோட்டத்தில் மேயுது வெள்ளைப்பசு - அங்கே
துள்ளிக் குதிக்குது கன்றுக்குட்டி
அம்மா என்குது வெள்ளைப்பசு - உடன்
அண்டையில் ஓடுது கன்றுக்குட்டி

நாவால் நக்குது வெள்ளைப்பசு - பாலை
நன்றாய்க் குடிக்குது கன்றுக்குட்டி
முத்தம் கொடுக்குது வெள்ளைப்பசு - மடி
முட்டிக் குடிக்குது கன்றுக்குட்டி

என்று பசுவுக்கும், அதன் கன்றுக்குட்டிக்கும் இடையிலான உறவினை எடுத்துச் சொல்லி குழந்தைகளுக்குத் தாயன்பைக் காட்டும் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, இந்திய தேசத் தந்தையான காந்தியடிகள் வாழ்ந்து காட்டிய, அவர் விரும்பிய வன்முறையற்ற நன்முறையிலான புதிய வழிமுறையான காந்தியத்தை;

"கூனக்கிழவி நிலவினிலே - இராட்டில்
கொட்டை நூற்கும் பணி செய்வதை - இம்
மாநிலம் கண்டு மகிழ்ந்திடவே - காந்தி
மாமதி யோங்கி வளருதம்மா."

என்று காந்தியின் கொள்கைகளை அனைவரும் பின்பற்ற வேண்டும் என்று விரும்பினார். இதற்காகக் குழந்தைகளுக்கு ஏற்றபடி பல காந்திய வழிப் பாடல்களையும், பல நல்வழிப்பாடல்களையும் பாடி குழந்தைகளுக்காகப் பாடியிருக்கிறார்.

விடுதலைப் போராட்டம்

இந்திய நாட்டின் விடுதலைப் போராட்டத்தில் இவர் நேரடியாகப் பங்கு பெறவில்லை எனினும், விடுதலைப்

போராட்டம் குறித்துப் பல பாடல்களைப் படைத்துள்ளார். இந்திய நாடு சுதந்திரம் பெற்று விட்டது என்று இருந்து விடாமல் அந்தச் சுதந்திரத்திற்குப் பாடுபட்ட விடுதலைப் போராட்ட வீரர்களை நாம் அன்றாடம் நினைவில் கொள்ள வேண்டும் என்று தனது சில பாடல்களில் விடுதலைப் போராட்ட வீரர்களுடைய தியாகத்தை நினைவூட்டுகிறார்.

கைநோவக் கால்நோவக் கல்லுடைத்துச் செக்கிழுத்து

மெய்சோர்ந்தும் ஊக்கம் விடாது நின்ற - ஐயன்
சிதம்பரம் அன்று சிறை சென்றிலனேல், இன்று
சுதந்திரம் காண்பாயோ? சொல்.

அஞ்சுவனோ வெள்ளையரின் ஆட்சியொழிப்பேன் என்று வஞ்சினம் கூறிநின்ற மாவீரன் - விஞ்சுபுகழ்ச் செந்தமிழ்ச் செல்வன் சிதம்பரப் பேரண்ணலை நாம் வந்தனை செய்வோம் மகிழ்ந்து. கப்பலை ஓட்டிக் கடுங்காவற்கு ஆளாகி உப்பிலாக் கூழ் உண்டு உடல் மெலிந்தோன் - ஒப்பிலாத் தென்னாட்டு வீர திலகன் சிதம்பரத்தின் நன் நாமம் வாழ்த்துக என் நா.

சிறை வாழ்க்கையில் கல்லுடைத்து, செக்கிழுத்து உடல் சோர்ந்தாலும் உள்ளம் சோராமல், ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராகப் போராடிய வ. உ. சிதம்பரனாரை வணங்கிட வேண்டும். ஆங்கிலேயருக்கு எதிராக கப்பலோட்டிய குற்றத்திற்காகக் கடுங்காவல் சிறைப்பட்டு, உப்பில்லாத உணவு உட்கொண்டு உடல் மெலிந்தாலும், ஒப்பில்லாத வீரனாகத் திகழ்ந்த வ. உ. சிதம்பரனாரை வாழ்த்த வேண்டும் என்று வாழ்த்துகிறார்.

இதுபோல் மகாகவி பாரதியார் குறித்தும், வேறு சில விடுதலைப் போராட்ட வீரர்கள் குறித்தும் பாடல்களைப் பாடி விடுதலைப் போராட்ட வரலாற்றையும், அதற்காகப் பாடுபட்ட விடுதலைப் போராட்ட வீரர்களையும் நினைவூட்டுகிறார்.

மொழி பெயர்ப்புப் பாடல்கள்

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை தமிழில் மட்டுமில்லாது ஆங்கில மொழியிலும் சிறப்பான தேர்ச்சி பெற்றிருந்தார். அவர் பாரசீக மொழியில் உருவாக்கப்பட்ட உமர்கய்யாம் பாடல்களை ஆங்கிலம் வழியாகத் தமிழுக்கு மொழிபெயர்ப்பு செய்து "உமர்கய்யாம் பாடல்கள்" என தனித்தலைப்பில் அளித்திருக்கிறார். அப்பாடல்களிலிருந்து சான்றாக இங்கு ஒன்றை மட்டும் நாம் பார்க்கலாம்.

வெய்யில் கேற்ற நிழலுண்டு;
வீசும் தென்றல் காற்றுண்டு;
கையில் கம்பன் கவியுண்டு;
கலசம் நிறைய மதுவுண்டு;
தெய்வ கீதம் பலவுண்டு;
தெரிந்து பாட நீயுமுண்டு;
வையம் தரும் அவ்வனமன்றி;
வாழும் சொர்க்கம் வேறுண்டோ?"

வெய்யில் எனும் வெப்பநிலைக்கு நிழல் இருக்கிறது, தென்றல் காற்று இருக்கிறது, கம்பன் எழுதிய கவிதை இருக்கிறது, தெய்வப் பாடல்கள் பல இருக்கிறது. அதைத் தெரிந்து பாட நீயும் இருக்கிறாய். இந்த உலகம் தரும் இயற்கையை விட வாழும் சொர்க்கம் வேறு எதுவுமில்லை. இருப்பதைக் கொண்டு சிறப்பாய் வாழக் கற்றுக் கொள்ள வேண்டும் என்பதை தமிழ் மொழிக்கேற்றவாறு மொழிபெயர்ப்பு செய்து எழுதியுள்ள அவரது கவித்திறன் நம் அனைவரையும் வியக்க வைக்கிறது.

நகைச்சுவைப் பாடல்கள்

கவிமணி நா. தேசிக விநாயகம் பிள்ளை நகைச்சுவையாகவும் சில பாடல்களையும் அவ்வப்போது எழுதியிருக்கிறார். ஒரு சமயம் சிரங்குகளின் தொல்லையால் வேதனையுற்றார். பல மருந்துகள் போட்டும் சிரங்குகள் ஆறாமல் இருந்தன. அந்த வேதனையைத் தாங்க முடியாமல் அவதிப்படும் நேரங்களில், சில நகைச்சுவைப் பாடல்களைப் பாடினார். அப்படி அவர் வெளியிட்ட நகைச்சுவைப் பாடல்களில் ஒன்று;

முத்துப் பவழம் முழுவயிரம் மாணிக்கம்
பத்தியொளி வீச பதக்கமெல்லாம் - சித்தன்
சிரங்கப்ப ராயன் சிறியேன் எனக்குத்

தரங்கண்டு தந்த தனம்.

முத்து, பவழம், வயிரம் மாணிக்கம் என உடலில் அனைத்தும் ஒளி வீசுகின்ற வகையில் பதக்கமாகக் கிடைத்திருக்கிறது. இவையெல்லாம், சொறி சிரங்கு எனும் செல்வந்தன், என்னுடைய உடல்நிலையைக் கண்டு கொடுத்த செல்வம் என்று தனது உடலில் ஏற்பட்ட சொறி சிரங்குகளின் வேதனையினை, எளிமையான, நகைச்சுவையான கவிதை வடிவில் வெளிப்படுத்திக் காட்டியிருக்கிறார். தன் உடல் நலம் பாதிக்கப்பட்ட நிலையைக் கூட நகைச்சுவையாக்கி, அதை கவி நயத்துடன் அழகாக வடிவமைத்திருக்கும் அவருடைய கவித்திறன் தற்போதும் பாராட்டுக்குரியதாகவே இருக்கிறது.

கவிமணியின் கவிதை நயம்

உள்ளத்துள்ளது கவிதை – இன்பம்
உருவெடுப்பது கவிதை
தெள்ளத் தெளிந்த தமிழில் – உண்மை
தெரிந்துரைப்பது கவிதை.

என்னும் கவிமணியின் கவிதை பற்றிய விளக்கம் அவரின் கவிதைகளுக்கு நன்கு பொருந்துவதாக இருக்கிறது.

சர். எட்வின் அர்னால்டு எழுதிய "The Light of Asia" என்னும் நூலைத் தழுவி எழுதப் பெற்ற "ஆசிய ஜோதி" , "எட்வர்ட் பிட்ஸ் ஜெரால்டு" ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த பாரசீகக் கவிஞர் உமர்கய்யாம் பாடல்களைத் தழுவி "உமர்கய்யாம் பாடல்கள்" , "மலரும் மாலையும்" , "நாஞ்சில் நாட்டு மருமக்கள் வழி மான்மியம்" , "கதர் பிறந்த கதை" ஆகிய ஐந்து கவிதைப் படைப்புக்களும், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையின் சிறந்த கவிதைப் படைப்புகளுக்கு மிகப்பெரும் சான்றாக இருக்கிறது. இவை தவிர, அவருடைய "தேவியின் கீர்த்தனங்கள்" என்ற இசைப் பாடல்களின் தொகுப்பில் இடம் பெற்றுள்ள பாடல்கள் பல இன்னிசைப் பாடகர்கள் இன்றும் மேடைகளில் விரும்பிப் பாடி வருகின்றனர். மொத்தத்தில் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையின் பாடல்கள் அனைத்தும் இன்றைய சமூகத்திற்கும் தேவையானதாக இருக்கிறது. கவிமணியின் பாடல்களைப் படிப்போம். அப்பாடல்களிலுள்ள இனிமையை ரசிப்போம். அதன் சுவையை ருசிப்போம்.

இயற்கை வாழ்வு -கவிமணி

https://tamilpadigalamvanga.blogspot.com/2021/09/blog-post_24.html

முன்னுரை

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த இணையற்ற கவிஞர். பள்ளி ஆசிரியர் மற்றும் கல்லூரி விரிவுரையாளராகப் பணியாற்றிய இவர் கவிஞராக மட்டும் அடையாளம் காணப்படுபவரில்லை. மொழிபெயர்ப்பாளர்,

ஏட்டுச் சுவடிகளின் தொகுப்பாளர், ஆய்வாளர், நூலாசிரியர் என்று இவருடைய வேறு சில சிறப்புகளும் இவருக்கு உண்டு. இவர் எழுதிய பாடல்கள் அனைத்தும் குறிப்பிட்ட எல்லைக்குள் முடங்கிக் கிடக்கவில்லை. இவரது கவிதைப் படைப்புகள் பரந்து விரிந்த கவிதை உலகில் பக்திப் பாடல்கள், இயற்கைப் பாடல்கள், இலக்கியப் பாடல்கள், குழந்தைப் பாடல்கள், வரலாற்றுப் பாடல்கள், வாழ்வியல் போராட்டப் பாடல்கள், சமூகப் பாடல்கள், தேசியப் பாடல்கள், வாழ்த்துப் பாடல்கள், கையறுநிலைப் பாடல்கள், பல்சுவைப் பாடல்கள் மற்றும் பிற மொழியைத் தழுவி எழுதிய மொழிபெயர்ப்புப் பாடல்கள் என்று பல்வேறு வகைப்பாடுகளில் பல விழுதுகளைக் கொண்டு பன்னெடுங்காலத்திற்கும் நிலைத்து நிற்கும்படி வேரூன்றி இருக்கின்றன.

இயற்கை வாழ்வு

கவிஞராய் இருப்பவர்கள் இயற்கையைப் போற்றி வணங்குவது மட்டுமில்லை, அதன் சிறப்பை வியந்து போற்றுவார்கள். அதை மற்றொன்றுடன் ஒப்பிட்டு மாற்றுவார்கள். அதை தன்னுடன் கூப்பிட்டு மகிழ்வார்கள். இயற்கையை எழுதாத கவிஞனே இல்லை. இதற்குக் கவிமணியும் விதிவிலக்கில்லை.

இயற்கை எழில் கொஞ்சும் நாஞ்சில் நாட்டில் பிறந்த கவிமணி, இயற்கை குறித்து பல பாடல்களைப் படைத்திருக்கிறார். அவற்றில் ஒன்றாக இங்கு "இயற்கை வாழ்வு" எனும் தலைப்பில் பாடிய பாடலை மட்டும் நாம் இங்கே காண்போம்.

பறந்து பறந்தெங்கும் – திரியும்
சிறந்த வாழ்வேதும் – இந்தச்
பறவை வாழ்வினைப்போல்,
செகத்தில் கண்டதுண்டோ?

இந்த உலகத்தில் பறவையின் வாழ்க்கையை போல் நல்ல சிறந்த ஒரு வாழ்க்கை எங்கும் கிடையாது..இப்படிப்பட்ட ஒரு சுதந்திரமான வாழ்வை சொர்க்கத்திலும் கூட கண்டதில்லை. (பறவைகள் எங்கே வேண்டுமானால் பறந்து செல்லலாம் ஆனால் மனிதர்கள் நாம் செல்வதற்கு கட்டணம் விசா போன்ற பிரச்சனைகள் உள்ளது)

சாதிச் சண்டையில்லை – ஓயாச்
சமயச் சண்டையில்லை;
வேத சாத்திரங்கள் – கூறும்
விதி விலக்கு மில்லை.

இயற்கை வாழ்வில் ஜாதி சண்டையும் இல்லை, சமய பேதமும் இல்லை. வேதங்கள் சாஸ்திரங்கள் கூறும் விதியும் இல்லை, விலக்கும் இல்லை .(மனிதர்களிடம் உண்டு)

தோட்டி களுமில்லை – உயர்ந்த
தொண்டை மானுமில்லை;
கோட்டை வீடுமில்லை – எளிய
குடி யிருப்புமில்லை.

இயற்கை வாழ்வில் தொழிலாளி முதலாளி என்ற ஏற்றத் தாழ்வுகளும் இல்லை, மாடி வீடு ,குடிசை வீடு என்ற பாகுபாடு இல்லை.(மனிதர்களிடம் உண்டு)

குரு மடங்களில்லை – சீடர்
குழாங்கள் ஒன்றுமில்லை;
ஒருவர் முன்னே விழுந் – தொருவர்
உபச ரிப்பதில்லை.

இயற்கை வாழ்வில் குருகுலக் கல்வியும் இல்லை,ஆசானுக்கு அடிமை என்று யாருமில்லை. ஒருவருர் விழுந்து ஒருவரை உபசரிக்கவும் தேவையில்லை .(மனிதர்களிடம் உண்டு)

பசுவைக் கொன்றுவிட்டுக் – கொன்ற

பாவம் நீங்கிடவே

பசுவின் தோற்செருப்புத் – தானம்

பண்ணு வதுமில்லை.

இயற்கை வாழ்வில் தேவைகளுக்காக பசுவைக் கொன்று ,கொன்ற பாவம் நீங்கிட பசுவின் தோலில் செருப்பு செய்து தானம் பண்ணுவதும் இல்லை.(மனிதர்களிடம் உண்டு)

செக்கினை விழுங்கி – அதனைச்

சீரணம் செய்யக்

சுக்கக் கஷாயம் – குடிக்கும்

தொழில்கள் ஏதுமில்லை.

இயற்கை வாழ்வில் அளவுக்கு மீறிய உணவுகளை உண்டு. அவற்றால் பல தொல்லைகள் ஏற்பட்டு அதனை சரி செய்ய யாரும் இங்கு தனியாக மருந்துகள் உண்ணும் தொழிலும் இல்லை .(மனிதர்களிடம் உண்டு)

குடிகெடுத்துவிட்டுப் – பழிகள்

கோடி செய்துவிட்டுக்

கடவுளை வணங்கி – நிதமும்

கண்ணீர் விடுவதில்லை.

இயற்கை வாழ்வில் பிறருக்குத் துன்பம் விளைவிக்கும் பல கேடுகளை செய்துவிட்டு கடவுளை வணங்கி நிதமும் கண்ணீர் விடுவதில்லை .(மனிதர்களிடம் உண்டு)

உரைத்த உரையெல்லாம் – மாறி

உரைத்திடு வாரில்லை;

துரைத்த னமுமில்லை – தொடரும்

துன்பங் களுமில்லை.

இயற்கை வாழ்வில் கூறிய உண்மையை மாற்றி பொய்யுரைக்கும் வழக்கமும் இல்லை.அதனால் ஏற்படக்கூடும் துன்பமும் யாருக்கும் இல்லை .(மனிதர்களிடம் உண்டு)

நீதி மன்றமில்லை – முழங்கும்

நியாய வாதியில்லை;

பாதி முதல்தனையும் – வழக்கில்

பறிகொ டுப்பதில்லை.

இயற்கை வாழ்வில் நீதிமன்றங்களும் இல்லை, நீதிபதிகளும் இல்லை ,வழக்கிற்கு பணம் செலவழித்து தன் பணத்தை யாரும் பறி கொடுப்பதில்லை .(மனிதர்களிடம் உண்டு)

நாளைக் கில்லையென – இன்று

நைந்து நைந்துருகி

மூளை கலங்கியே – இருந்து

முணுமு ணுப்பதில்லை.

இயற்கை வாழ்வில் எந்த உயிரினமும் நாளைக்கு இவை தேவை என சேமித்து வைப்பதும் இல்லை. எனக்கு கிடைக்காது என்று மனம் நொந்து மூளை கலங்கி முனுமுனுப்பதில்லை.(மனிதர்களிடம் உண்டு)

உண்டிக் கலந்து போய்க் – கெஞ்சி

ஒருமனிதனையும்

அண்டி வாழவேண்டாம் – ஏழை

அடிமை யாகவேண்டாம்.

இயற்கை வாழ்வில் உணவுக்காக யாரும் யாரையும் சார்ந்து இருக்க வேண்டாம்.ஏழைகள் யாருக்கும் எந்தத் தேவைக்கும் அடிமையாக வேண்டாம். (மனிதர்களிடம் உண்டு)

அச்சக் கும்பிடில்லை; – நடிக்கும்

அன்புக் கும்பிடில்லை;

பிச்சை யெடுப்பில்லை – காட்டும்

பித்த லாட்டமில்லை.

இயற்கை வாழ்வில் யாரும் யாருக்கும் பயப்படத் தேவையில்லை. பிச்சை எடுப்பதில்லை, பித்தலாட்டங்கள் இல்லை.(மனிதர்களிடம் உண்டு)

இரப்ப வருமில்லை – சோம்பி

இருப்ப வருமில்லை;

புரப்ப வருமில்லை – அவரைப்

புகழு வாருமில்லை.

கொடை வேண்டி சோம்பேறியாக இருப்ப வரும் யாருமில்லை. பல கோடிகளை அள்ளிக் கொடுப்ப வரும் அவரை புகழ்வோரும் யாரும் இல்லை .(மனிதர்களிடம் உண்டு)

பட்டுடை வேண்டாம் – வயிரப்

பணிகள் பூணவேண்டாம்;

பொட்டிட வேண்டாம் – தலையில்

பூவும் சூட வேண்டாம்.

இயற்கை வாழ்விற்கு பட்டு உடைகள் வேண்டாம். வைரம் மணிகளும் வேண்டாம். பொட்டும் வேண்டாம் .தலையில்

பூச்சூடி ஆடம்பரத் தேவைகள் வேண்டாம்.

வெற்றி தோல்வியில்லை – பணத்தால்
வெறியும் கொள்வதில்லை;
கற்றறிந் தோமென்று – செருக்கும்
காட்டி நிற்பதில்லை.

இயற்கை வாழ்வில் வெற்றியும் இல்லை தோல்வியும் இல்லை பணத்தால் வரும் வெறியும் இல்லை..படித்தவன் நான் என்று மனசெருக்கும் இல்லை .

வஞ்சம் சூதில்லை – ஈசன்
வகுத்த வழியன்றி,
நெஞ்சம் என்றுமே – வேறு
நெறியிற் செல்வதில்லை.

இயற்கை வாழ்வில் வஞ்சகம் சூது இன்றி ஈசன் வகுத்த வழி இதுவே என்று நெஞ்சம் பொறுத்து நெறிபிறழ் நடத்தையில் செல்வதில்லை.

இயற்கை வாழ்வு போல இன்பமாக வாழ மனிதன் செய்ய வேண்டியது

உள்ள துள்ளபடி – பேசி
உலகில் வாழ்ந்திடலாம்
கள்ளம் கபடுகள் – இன்றிக்
காலம் போக்கிடலாம்

உள்ளத்தில் எழும் கருத்துக்களை உள்ளபடியே பேசி வாழ்ந்திட வேண்டும் .கள்ளம் கபடமின்றி காலப்போக்கில் தனது வாழ்க்கையை நடத்திட வேண்டும்

புவியிற் பசுவெல்லாம் – உணவு

பொறுக்கி உண்டிடலாம்;

கவலை யற்றிரவில் நன்றாய்க்

கண்ணுறங் கிடலாம்.

புவியில் காலைப் பொழுதெல்லாம் உணவை தேடி உண்ண வேண்டும்.பின்னர் கவலையின்றி இரவில் நன்றாய் கண்ணுறங்க வேண்டும்

கனி கனிந்துதிரும் - சோலை

கண்டு தங்கிடலாம்;

இனிய கீதங்கள் - பாடி

என்றும் வாழ்ந்திடலாம்.

இயற்கை எழில் பொங்கும் சோலையை கண்டு அங்கு தங்கிட வேண்டும் இனிய கீதங்கள் பாடி என்றும் வாழ்ந்திட வேண்டும்

பகுத்தறி வெதற்கோ? - பறவை

படைத்த நாள்ஈசன்

வகுத்தளித் திருக்கம் - இயற்கை

வாசனை போதாதோ?

பகுத்தறிவு எதற்கு ?பறவைகளை படைத்தை ஈசன் கொடுத்த இந்த இயற்கை வாசனை போதாதோ ?

தேரும் பொதுவுடைமை - ருஷிய

தேசத்தி லுள்ளதெல்லாம்,

பாரில் பறவைகளைக் - கண்டு

படித்த பாடமேயாம்.

பொதுவுடமைக் கொள்கைகள் உள்ள ரஷ்ய தேசத்தில் பறவைகளைப் பாடிக் கொண்டிருக்கிறார்கள் .

நமனை எண்ணியெண்ணி – உள்ளம்

நடுந டுங்கிடாமல்,

அமைதி கண்டிடலாம் நித்ய

ஆனந்தம் பெற்றிடலாம்.

எமனால் ஏற்படும் உயிர் இழப்பை எண்ணி உள்ளம் நடுங்காமல் அமைதியுடன் வாழ்க்கையை வாழ்ந்தால் ஆனந்தம் பெற்றிடலாம் .

கவிதையில் கரைந்த 'கவிமணி'!

பி.தயாளன்

HTTPS://KEETRU.COM/INDEX.PHP/2018-01-12-05-57-50/2014-03-08-04-39-26/2014-03-14-11-17-85/29080-2015-09-01-02-14-50

தென் இந்திய ஆராய்ச்சியில் ஈடுபட்டுழைத்தவர். சுசீந்திரம், கன்னியாகுமரி, நாகர்கோவில், பூதப்பாண்டி, அழகிய பாண்டியபுரம் ஆகிய ஊர்களில் உள்ள திருக்கோயில்களில் மறைந்தும், புதைந்தும் கிடந்த கல்வெட்டுகளை வெளிக் கொணர்ந்து நுணுகி ஆராய்ந்தவர். செப்பேடுகள், ஓலைக்சுவடிகள் முதலியவைகளையும் தேடித்தேடி ஆராய்ச்சி சேர்ந்தவர். கவிதைகள், உரைநடை நூல்கள், இயல், இசை, நாடகம் என்னும் முத்துறைக்கும் எண்ணற்ற நூல்கள் அளித்தவர். பிறமொழி இலக்கியங்களைத் தமிழில் பெயர்த்தவர். குமரியைத் தமிழ்நாட்டுடன் இணைப்பதற்கு அரும்பாடுபட்டவர். 'கவிமணி' என்னும் சிறப்புப்பட்டம் அளிக்கப்பட்டு பாராட்டப்பட்டவர். 'தேசியக்குயில்' என மக்களால் போற்றப்படுகிறவர்! அவர்தான் 'கவிமணி' தேசிய விநாயகம் பிள்ளை!

குமரி மாவட்டம் சுசீந்திரம் அருகில் உள்ள 'தேரூர்' என்னும் சிற்றூரில், சிவதாணுப் பிள்ளை-ஆதிலட்சுமியம்மையார் தம்பதியினருக்கு, 27.07.1876 ஆம் நாள் மகனாகப் பிறந்தார் விநாயகம் பிள்ளை. தேரூரில் உள்ள தொடக்கப் பள்ளியில் ஆரம்பக் கல்வி கற்றார். அக்காலத்தில் குமரி மாவட்டம் திருவிதாங்கூர் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. அதனால், பள்ளியில் அவர் மலையாளமே கற்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இருப்பினும் தாய் மொழியாம் தமிழ் மீது பற்றுக் கொண்டு தமிழை ஆர்வத்துடன் கற்றார்.

தேரூரின் வடக்குப் பக்கத்தில் உள்ள ஏரியில் 'வாணன் திட்டு' என்னும் பெயரில் ஒரு தீவு உள்ளது. அத்தீவில் உள்ள திருவாவடுதுறை ஆதினத்திற்குச் சொந்தமான மடத்தில் வாழ்ந்து வந்த சாந்தலிங்கத் தம்பிரான் என்பவரிடம் தமிழ் கற்றார்.

தொடக்கக் கல்வியை முடித்ததும் கோட்டாற்றில் உள்ள ஆங்கிலப் பள்ளியில் சேர்ந்து பயின்றார். மீண்டும் சாந்தலிங்கத் தம்பிரானிடம் சென்று தமிழ் இலக்கண இலக்கியங்களை முறையாகப் பயின்றார். தமிழில் கவிதை புனையும் ஆற்றல் கைவரப்பெற்றார். பள்ளியில் பயிலும் போதே பாடல் எழுதினார். தமிழாசிரியரின் பாராட்டையும் பெற்றார்! தம்பிரான் வேண்டுகோளுக்கிணங்க 'அழகம்மை ஆசிரிய விருத்தம்' பாடினார்.

நாகர்கோவிலில் உள்ள ஸ்காட் கிறித்துவக் கல்லூரியில் எஃப்.ஏ. படிப்பை முடித்தார். பின்பு திருவனந்தபுரத்தில் ஆசிரியப்பயிற்சியை முடித்தார். உமையம்மையார் என்பவரைத் தனது வாழ்க்கைத் துணையாக ஏற்றார்.

கோட்டாற்றில் உள்ள தொடக்கப் பள்ளியில் ஆசிரியராகச் சேர்ந்தார். மாணவர்களுக்குப் பாடங்கற்பிப்பதோடு, குழந்தைகளுக்கான பாடல்களும் இயற்றினார். அவரின் சிறந்த ஆசிரியப் பணியினால் ' நல்லாசிரியர்' எனப் போற்றிப் பாராட்டப்பட்டார். பின்பு, கோட்டாற்றில் உள்ள ஆசிரியப் பயிற்சி பள்ளியில் ஆசிரியராக நியமிக்கப்பட்டார். நாகர்கோவிலில் போதனாமுறைப் பாடசாலையிலும், திருவனந்தபுரம் அரசினர் மகளிர் உயர்நிலைப் பள்ளியிலும்

தலைமையாசிரியராகவும், மகாராஜா கல்லூரியில், தமிழ் விரிவுரையாளராகவும் பணியாற்றினார்.

புத்தபிரான் பற்றி ஆங்கிலக் கவிஞர் எட்வின் ஆர்னால்ட் எழுதிய 'லைட் ஆப் ஆசியா' (Light of Asia) என்னும் நூலை 'ஆசிய ஜோதி' எனும் தலைப்பில் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டார்.

பாரசீகக் கவிஞர் உமர்கயாம் பாடல்களையும் தமிழில் பெயர்த்தார். இவரது, 'மலரும் மாலையும்' என்னும் கவிதை நூலில் பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் பல இடம் பெற்றுள்ளன.

பிறமொழி இலக்கியங்களைக் கவிதைத் தமிழில் கொண்டு வந்து சேர்த்தவர் 'கவிமணி'. மேலும் 'நாஞ்சில் நாட்டு மருமக்கள் வழி மான்மியம்' –என்ற நகைச்சுவை நூலையும், 'தேவியின் கீர்த்தனைகள்' என்ற பக்தி நூலையும் படைத்து அளித்துள்ளார். இவரது பாடல்கள் பாமரரும் படித்துப் பொருள் புரிந்து கொள்ளும்படி எளிமையான முறையில் அமைந்துள்ளன.

அனைவரும் போற்றும் 'காந்தளூர்ச் சாலை' என்னும் ஆராய்ச்சி நூலை ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்டார். சென்னைப் பல்கலைக் கழகத்தில் 1926 முதல் 1936 வரை, தமிழ்ப் பேரகராதியின் சிறப்பு ஆலோசகராகவும், 1941 ஆம் ஆண்டு திருவிதாங்கூர் பல்கலைக் கழக தமிழ்ப்பாடக் குழுவில் உறுப்பினராகவும் இருந்து சிறப்பாகப் பணியாற்றி பலரின் பாராட்டைப் பெற்றார்.

சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தினர், 24.12.1940ஆம் நாள், சென்னை பச்சையப்பன் கல்லூரியல், 'தமிழ்வேள்' உமா மகேசுவரனார் தலைமையில் தேசிய விநாயகம் பிள்ளைக்குப் பாராட்டு விழா நடத்தினர். அந்த விழாவில் அவரைப் பாராட்டி 'கவிமணி' என்னும் சிறப்புப் பட்டம் அளித்தனர்.

செட்டிநாட்டு அரசர் அண்ணாமலைச் செட்டியார், கவிமணிக்கு பொன்னாடை போர்த்திப் பாராட்டினார். திருநெல்வேலியிலும், 1944ஆம் ஆண்டு, கவிஞருக்குப் பாராட்டு விழா நடத்தினர்.

நாகர்கோவிலில், கவிமணிக்கு எழுபதாவது ஆண்டு விழா நடை பெற்றது. அந்த விழாவில், அப்போதைய மத்திய நிதி அமைச்சர்

ஆர்.கே. சண்முகம் செட்டியார் கலந்து கொண்டு பாராட்டுரை வழங்கிப் பாராட்டினார். அவர் பிறந்த ஊரில் மக்கள் நன்கொடை திரட்டிக், 'கவிமணி நிலையம்' ஒன்று கட்டி எழுப்பி உள்ளனர்.

வள்ளுவர், ஔவையார், கம்பர், பாரதியார் பற்றியெல்லாம் பாடல்களைப் பாடிப் பரவசம் கொண்டுள்ளார்.

"வள்ளுவர் தந்த திருமறையைத் தமிழ்
மாதின் உயர் நிலையை"
எனத் திருக்குறளைப் போற்றிப் பெருமிதத்துடன் பாடியுள்ளார்.

சிலப்பதிகாரம் குறித்து,
"தேனிலே ஊறிய செந்தமிழின் சுவை
தேடும் சிலப்பதிகாரம்"

எனப் பாடிப் புகழ்ந்துள்ளார்.

தமிழின் பன்முக வளர்ச்சிக்காக நாளும் பொழுதும் கவிதையில் கரைந்த, 'கவிமணி' தேசிய விநாயகம் பிள்ளை, 26.09.1954ஆம் நாள் மறைந்தார். அவர் மறைந்தாலும் அவர் ஆற்றிய தமிழ்த் தொண்டு என்றும் மறையாமல் நிலைத்து நிற்கும்.

- பி.தயாளன்



https://www.panippookkal.com/ithazh/archives/5526

தமிழனென்று சொல்லடா – கவிமணி

"தமிழனென்று சொல்லடா, தலை நிமிர்ந்து நில்லடா" என்ற பாரதியின் வரிகளைப் பின்பற்றி, நம்மைத் தலை நிமிர்ந்து வாழவைத்த இன்னொரு தமிழ்ப் பெருந்தகை கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையாகும்.

பாட்டுக் கொருபுலவன் பாரதியடா! – அவன்
பாட்டைப் பண்ணோடொருவன் பாடினானடா!

கேட்டுக் கிறுகிறுத்துப் போனேனேயடா! – அந்தக்
கிறுக்கில் உளறுமொழி பொறுப்பாயடா!
சொல்லுக்குச் சொல்லழகும் ஏறுமேயடா! – கவி
துள்ளும் மறியைப்போலத் துள்ளுமேயடா !
கல்லும் கனிந்துகனி யாகுமேயடா ! – பசுங்
கன்றும் பால் உண்டிடாது கேட்குமேயடா!

சுப்பிரமணிய பாரதி இயற்றிய பாடல்களின் பெருமையை, செழுமையை, எளிமையை இவ்வளவு இனிமையாகக் கவிதை வடிவில் விளக்கியவர் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையாவார். இதே வரிகளை நாமெடுத்துக் கொண்டு, கவிமணியின் கவியமுதை விளக்கினாலும் அதுவும் பொருத்தமாகவே இருக்குமென நம்புகிறோம்.

கவிமணி அவர்கள் கன்னியாகுமாரி மாவட்டத்தில் நாகர்கோவில் நகருக்கு அருகிலுள்ள தேரூர் எனும் சிற்றூரில் 1867 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 27 ஆம் திகதி பிறந்தார். அவரின் தந்தையார் சிவதாணுப் பிள்ளை, தாயார் ஆதி லக்ஷ்மி அம்மாள். தொடக்கத்தில் தேரூர் ஆரம்பப் பள்ளியிலும், பின்னர் கோட்டாறு அரசினர் உயர்நிலைப் பள்ளியிலும் கல்வி கற்றார். பின்னர் முதுகலைப் பட்டமும் (எம். ஏ) பெற்றவர் கவிமணி. மேலும், திருவனந்தபுரம் ஆசிரியப் பயிற்சி நிறுவனத்தில் ஆசிரியர் பயிற்சியும் பெற்றார். அந்தக் காலகட்டத்தில் அவர் வாழ்ந்த பகுதி கேரள மாநிலத்தைச் சேர்ந்திருந்ததால் அவரின் பள்ளிப்படிப்பு முழுவதும் மலையாள மொழியிலேயே அமைந்திருந்தது. பள்ளிப் படிப்பிற்கிடையே, திருவாவடுதுறை மடத்தின் தலைவர் சாந்தலிங்கத் தம்புரானிடம் தமிழ் இலக்கண, இலக்கியங்களைக் கற்றுத் தேர்ந்தார். 1901 ஆம் ஆண்டும் உமையம்மை என்பவரை மணந்த கவிமணிக்கு, குழந்தைப் பேறு இல்லை.

இயல்பாகவே இவரிடம் அறிவியல் கண்ணோட்டம் நிறைந்து காணப்பட்டது, அதனோடு கூட வரலாற்று நிகழ்வுகளின்மீது ஆர்வம் அதிகமுள்ளவராக இருந்ததாலும், மரபு வழிச் சிந்தனைகளுடன் நவீன சிந்தனைகளும் ஒருங்கே இணையப் பெற்றவராக இருந்தார். ஆசிரியப் பயிற்சிக்குப் பிறகு ஆரம்பத்தில் பள்ளி ஆசிரியராகப் பணியாற்றிய இவர், கல்லூரி

ஆசிரியராகவும் பணிபுரிந்து, கிட்டத்தட்ட முப்பத்தி ஆறு வருட கண்ணியமான ஆசிரியப் பணிக்குப் பிறகு ஓய்வு பெற்றார்.

தேச விடுதலைக்கான குரல், காந்தி, பாரதி, போன்ற விடுதலைப் போராட்டத் தலைவர்கள் குறித்த கவிதைகள், ஆராய்ச்சி, வரலாறு, அறிவியல், வாழ்வியல், குழந்தைகளுக்கு நல்லவை அறிவுறுத்துதல், இயற்கை, இறை வழிபாடு, பெண்ணடிமைத் தன எதிர்ப்பு, தாழ்த்தப் பட்டவர்களுக்கு ஆதரவு மற்றும் இறுதியாகத் தமிழ்த் திரைத்துறை என இவர் தொடாத துறைகளே இல்லையெனலாம். சுதந்திரப் போராட்டத்தில் மிதவாதத்தைப் பெரிதும் ஆதரித்த கவிமணி, காந்தியைக் குறிப்பிட்டு ஆங்கிலேயர்களைத் தேசம் விட்டுப் போகுமாறு புனைந்த கீழ்க்கண்ட வரிகள் பிரபலமானவை.

கள்ளரக்கா குலத்தோடு நீ

கப்பலேறத் தாமதமேன்

வள்ளல் எங்கள் காந்தி மகான்

வாக்கு முற்றும் பலித்ததினி !!

போராடிப் பெற்ற விடுதலைக்குப் பிறகு, சுதந்திர இந்தியாவில் வாழும் வாய்ப்புக் கிடைத்த நம் கவிஞர், நம் வாழ்க்கை எவ்வாறு அர்த்தமுள்ளதாக இருக்க வேண்டுமென்பதற்கும் மீண்டும் காந்தியையே தலைவராகக் கொண்டு குறிப்பிடுகிறார்.

உண்ணும் உணவுக் கேங்காமல்
உடுக்கும் ஆடைக் கலையாமல்
பண்ணும் தொழில்கள் பலகாண்போம்
பஞ்சப் பேயைத் துரத்திடுவோம்
அண்ணல் காந்திவழி பற்றி
அகிலம் புகழ வாழ்ந்திடுவோம்

பல தனிக் கவிதைகளுடன், சில புகழ்பெற்ற அந்நிய மொழிப் படைப்புகளையும் தனக்கே உரிய தனி முத்திரையுடன் தமிழில் மொழி பெயர்த்துள்ளார் கவிமணி. சர். எட்வின் அர்னால்ட் எழுதிய “லைட் ஆஃப் ஏஷியா” (Light of Asia) என்ற நூலைத் தழுவி எழுதப்பட்ட “ஆசிய ஜோதி” என்ற அவரின் நூல் தமிழர் சமுதாயத்தில் மிகவும் பெருமை வாய்ந்த நூலாகக் கருதப்பட்டது, இன்றும் கருதப்படுகிறது. இதில் மொழிபெயர்ப்பு எனத் தோன்றாவண்ணம் பல கவிதைகளைத் தந்துள்ளார். மற்றும்,

மிகப் பெரிய தத்துவஞானி எனப் புகழப்படும் பாரசீகக் கவிஞர் உமர்கய்யாம் அவர்களின் கவிதைகளைத் தழுவி, தமிழில் பல கவிதைகள் புனைந்துள்ளார்.

ஏற்கனவே குறிப்பிட்டது போல, ஆராய்ச்சித் துறையிலும் தனது முத்திரையைப் பதித்தவர் தேசிக விநாயகம் பிள்ளை. குறிப்பாக, 1922 ஆம் ஆண்டு 'மனோன்மணியம் மறுபிறப்பு' என்ற பெயரில் அவரெழுதிய திறனாய்வுக் கட்டுரை மிகவும் பிரபலமானது. தவிர, சென்னைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்ப் பேரகராதி உருவாக்கத்தில் மதிப்பியல் உதவியாளராகப் பணி புரிந்தார். மேலும், கம்பராமாயணம், திவாகரம், நவநீதப் பாட்டியல் முதலிய பல நூல்களின் ஏட்டுப் பிரதிகளைத் தொகுத்திருக்கிறார். கவிமணி எழுதிய நூல்களில் கீழ்க்கண்டவை மிகவும் பிரபலமானவை;

- அழகம்மை ஆசிரிய விருத்தம்
- ஆசிய ஜோதி
- மலரும் மாலையும்
- மருமக்கள்வழி மான்மியம்
- கதர் பிறந்த கதை
- உமார் கய்யாம் பாடல்கள்
- தேவியின் கீர்த்தனங்கள்
- குழந்தைச்செல்வம்
- கவிமணியின் உரைமணிகள்

குழந்தைகளுக்காகவும் பல எளிமையான, இனிமையான கவிதைகளைப் படைத்தவர் கவிமணி. குழந்தைகளுக்காக அவர் இயற்றிய பாடல்களில் பல தமிழகப் பாடப் புத்தகங்களில் பாடங்களாக இடம் பெற்றுள்ளன. இவற்றில் மிகவும் எளிமையான, இனிமையான பாடல்;

தோட்டத்தில் மேயுது வெள்ளைப்பசு – அங்கே
துள்ளிக் குதிக்குது கன்றுக்குட்டி
அம்மா என்றது வெள்ளைப்பசு – உடன்
அண்டையில் ஓடுது கன்றுக்குட்டி

சமூக விழிப்புணர்ச்சிப் பாடல்களாகப் பல எழுதியுள்ள கவிமணி, தாழ்த்தப்பட்டவர்கள் கோவிலுக்குள் நுழையக்கூடாது

என்றிருந்த நிலையைச் சாடி, முற்போக்காகப் பாடிய கீழ்க்கண்ட பாடலை எடுத்துக் காட்டாகக் கூறலாம்;

கண்ணப்பன் பூசை கொளும்
கடவுளர் திருக்கோவிலிலே
நண்ணக் கூடாதோ, நாங்கள்
நடையில் வரல் ஆகாதோ

மேலும் சாதிப் பிரிவினைக் காட்டுவதைக் கடுமையாகச் சாடி, சாதிக்கான வரையரையாக இவ்வாறு கூறுகிறார்;

மன்னுயிர்க்காக உழைப்பவரே – இந்த
மாநிலத் தோங்கும் குலத்தினராம்
தன்னுயிர் போற்றித் திரிபவரே – என்றும்
தாழ்ந்த குலத்தில் பிறந்தோர் அம்மா.

இவர் தனிக் கவிதையாக எழுதிய சில பாடல்கள் திரைப்படங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளன. 1947 ஆம் ஆண்டு வெளிவந்த "பைத்தியக்காரன்" என்ற படத்தில் இவரின் பாடல் பயன்படுத்தப்பட்டது, அதனையடுத்து 1951 ஆம் ஆண்டு வெளியான "மணமகள்"" என்ற படத்திலும், "தாயுள்ளம்" என்ற படத்திலும் இவரின் பாடல்கள் பயன்படுத்தப்பட்டன.

கோயில் முழுவதும் கண்டேன் – உயர்
கோபுரம் ஏரிக் கண்டேன்
தேவாதி தேவனை நான் – எங்கெங்கு
தேடினும் கண்டிலனே !!

என்ற பகுத்தறிவுக் கருத்துப் பரிமளிக்கும் கவிதையினைத் திரையுலகம் தாயுள்ளம் படத்தில் பயன்படுத்தி அது பிரபலமாகவே இன்னும் பல படங்களில் இவரின் பாடல்கள் பயன்படுத்தப்பட்டன. இவராகத் திரைக்கு நேரடியாகப் பாடல் எழுதாவிட்டாலும், இவர் எழுதிய கவிதைகள் நன்றாகப் பொருந்தி வரும் கதைக் களங்களில் உபயோகப் படுத்தப்பட்டன. அதைத் தொடர்ந்து, "வேலைக்காரன்" (1952ல் வெளியானது), கள்வனின் காதலி, கண்ணின் மணிகள், நன் நம்பிக்கை எனப் பல திரைப்படங்களில் இவரின் பாடல்கள் பயன்படுத்தப்பட்டன.

"ஆசிய ஜோதி" நூலின் பகுதியான ஒரு கவிதை "கள்வனின் காதலி" திரைப்படத்தில் இடம்பெற்று, கண்டசாலா மற்றும்

பானுமதியின் குரலில் வெளிவந்து பெரும்புகழ் பெற்றது. அந்தப் பாடல்;

வெய்யிற் கேற்ற நிழலுண்டு
வீசும் தென்றல் காற்றுண்டு
கையில் கம்பன் கவியுண்டு
கலசம் நிறைய மதுவுண்டு
தெய்வ கீதம் பலவுண்டு
தெரிந்து பாட நீயுண்டு
வையந் தருமிவ் வனமன்றி
வாழும் சொர்க்கம் வேறுண்டோ!

கவிமணி அவர்களே ஒரு கவிதையின் இலக்கணம் என்ன என்பதைத் தனது எளிதான கவிதை மூலம் தெரிவிக்கிறார்.

உள்ளத் துள்ளது கவிதை – இன்பம்
உருவெ டுப்பது கவிதை
தெள்ளத் தெளிந்த தமிழில் – உண்மை
தெரிந்து ரைப்பது கவிதை.

இந்த இலக்கணத்திற்குச் சற்றும் பிறழாமல் கவிதை புனைந்து, நேர்மையுடனும் பெருமையுடனும் நிறைவான வாழ்க்கை வாழ்ந்த கவிமணி தனது எழுபத்தி எட்டாவது வயதில் தனது மனைவியின் ஊராகிய புத்தேரி என்கிற ஊரில் செப்டம்பர்த் திங்கள் 26ஆம் திகதி, நிலவுலகு நீத்தார்.

தமிழ் மொழி உள்ளளவும், உலகில் கடைசித் தமிழன் வாழுமளவும் கவிமணியின் புகழ் மறையாதிருக்கும் என்பதில் எந்த ஐயமுமில்லை.

– வெ. மதுசூதனன்

Kavimaniyin Kavithaikal

https://www.tamilvu.org/ta/library-l9302-html-l9302top-146607

பொருளடக்கம்

உள்ளமும், உணர்வும் (489-636)

சமூகம் (637-842)

தேசியம் (843-930)

தனிமனிதர் வாழ்த்து (931-1056)

நிறுவன வாழ்த்து (1057-1112)

பொதுவான வாழ்த்துக்கள் (1246-1270)

II. மருமக்கள் வழி மான்மியம்

III ஆசியஜோதி

பின்னிணைப்புகள்

இலக்கிய வாழ்க்கை

கவிமணி தன் இருபது வயதில் கவிதைகள் எழுத ஆரம்பித்துவிட்டார். ஆரம்ப காலத்தில் கவிமணி எழுதிய கவிதைகள் சிலவும் ஆங்கிலக் கட்டுரைகள் சிலவும் பாதுகாக்கப்படவில்லை. அவர் திருவனந்தபுரத்தில் இருந்தபோது குழந்தைகளுக்காகப் பாடல்களும் கட்டுரைகளும் எழுதினார். இளமையிலேயே நாட்டாரிலக்கியங்களில் கொண்ட ஆர்வம் அவர் கவிதைகளை வடிவமைத்தது. அவர் இயற்றிய பாடல்களில் சிந்து, கும்மி ஆகிய நாட்டார் பாடல் வடிவங்கள் பெருமளவில் பயின்றுவருகின்றன. நாட்டார் பாடல் வடிவங்களான தாலாட்டு, ஒப்பாரி ஆகியனவும் பழமொழிகள், நம்பிக்கைகள், வழக்காறுகள், வாய்மொழி ஆகியனவும் விரவி வருகின்றன. கவிமணி ஆரம்பக்காலத்தில் எழுதியவை பண்டித நடையிலான செய்யுட்களே. பிற்காலத்தில் இவரது நடை சாதாரண வாசகனுக்குப் புரியும்படி ஆகியது. இதற்கு இவரது நாட்டார் வழக்காற்றுச் செல்வாக்கும், கல்வெட்டுப் பயிற்சியும் காரணமாக இருக்கலாம் என்று அ.கா. பெருமாள் கூறுகிறார்.

குழந்தையிலக்கியம்

தமிழின் முதல் குழந்தைக் கவிஞர் என கவிமணி குறிப்பிடப்படுவதுண்டு. 'Baby' என்னும் ஆங்கிலப் பாடல் ஒன்றினைத் தமிழில் 'குழந்தை' என்னும் தலைப்பில் மொழிபெயர்த்துள்ளார். 'மலரும் மாலையும்' தொகுதியில் உள்ள முத்தந்தா, காக்காய், கோழி என எட்டுக்கும் மேற்பட்ட தலைப்புகளில் உள்ள பாடல்கள் நாட்டார்க் குழந்தைப் பாடல் வடிவம்கொண்டவை.

நாஞ்சில்நாட்டு மருமக்கள்வழி மான்மியம் (1942)


கவிமணியின் முக்கியமான படைப்பாக இன்று கருதப்படுவது நாஞ்சில்நாட்டு மருமக்கள்வழி மான்மியம். இது தமிழின் முதல் எள்ளல் நூல் என்றும் குமரிமாவட்ட வட்டார வழக்கு இலக்கியத்தின் முன்னோடி நூல் என்றும் கருதப்படுகிறது

ஆசியஜோதி (1941)

எட்வின் ஆர்னால்டின் "Light Of Asia" நூலைத் தழுவி தமிழில் 'ஆசிய ஜோதி' என்ற நூலை கவிமணி எழுதினார். இந்தியா எங்கும் எட்வின் ஆர்னால்டின் கவிதையின் வெவ்வேறு வடிவங்கள் வெளிவந்துள்ளன. அவற்றில் ஆசியஜோதி முக்கியமானது.

பிறநூல்கள்

ஸ்ரீவைகுண்டம் சுப்பிரமணிய பிள்ளை என்பவர் கவிமணியின் சில பாடல்களை 1932-ல் வெளியிட்டார். 1938-ல் மு. அருணாசலம் வேறு பாடல்களையும் தொகுத்து மலரும் மாலையும் என்னும் தலைப்பில் ஒரு நூல் வெளியிட்டார். கவிமணியின் உரைமணிகள் (1952), தேவியின் கீர்த்தனைகள் (1953) போன்ற நூல்கள் பின்னர் வந்தன. பாரசீகக் கவிஞர் உமர் கய்யாம் பாடல்களைத் தழுவி "ரூபாயத்" எனும் தலைப்பில் தமிழில் எழுதினார்.



ஆய்வுகள்

கவிமணியின் இறுதிக்காலத்தில் அவருடைய ஆர்வம் ஆய்வுகளில் இருந்தது. அவருடைய ஆய்வுகள் இரண்டு களங்களைச் சேர்ந்தவை. அவர் வரலாற்று ஆவணங்களை கண்டெடுத்து பாடபேதம் நோக்கி ஆராய்ச்சி உரைகளுடன்

வெளியிட்டார். நாட்டார்ப்பாடல்களையும் நாட்டார் வரலாற்றுச் சான்றுகளையும் தொகுத்து வெளியிட்டார். இலக்கிய நூல்களை ஆய்வுக்குறிப்புகளுடன் விமர்சித்து எழுதினார்.

நாட்டாரியல்

- கவிமணி 'திவான் வெற்றி' என்னும் கதைப் பாடல் குறித்து ஆங்கிலத்தில் ஒரு கட்டுரை எழுதியுள்ளார். தமிழ்க் கதைப்பாடல் பற்றி வெளிவந்த முதல் ஆங்கிலக்கட்டுரை இது.
- கேரள சொசைட்டி பேப்பர்ஸ் ஆங்கில ஆய்விதழில் இவர் எழுதிய 'வள்ளியூர் மரபுச் செய்திகள்' என்ற கட்டுரை ஐவர் 'ராசாக்கள் கதைப்பாடல்' பற்றியது. 1910 அளவில் இதற்காகக் கள ஆய்வு செய்திருக்கிறார் இக்காலத்தில் ஓலையில் எழுதப்பட்ட கதைப்பாடல்களை இவர் சேகரித்திருக்கிறார்.

வரலாற்று ஆய்வு


- அழகியபாண்டியபுரம் முதலியார் ஓலைகளை கவிமணி ஆய்வுக்குறிப்புகளுடன் பதிப்பித்தார்



கவிமணி மனைவியுடன்

இலக்கிய ஆய்வு

- 1922-ல் 'மனோன்மணியம் மறுபிறப்பு' என்ற திறனாய்வுக் கட்டுரையை எழுதினார்.
- சென்னை பல்கலைக்கழகத்தின் தமிழ்ப் பேரகராதி உருவாக்கத்தில் மதிப்பியல் உதவியாளராக இருந்தார்.
- கம்பராமாயணம் திவாகரம், நவநீதப் பாட்டியல் முதலிய பல நூல்களின் ஏட்டுப் பிரதிகளைத் தொகுத்திருக்கிறார்.



கவிமணி- அ.கா.பெருமாள்

கல்வெட்டாய்வு


கவிமணி வரலாற்றாய்வாளர், கல்வெட்டுகளை நுட்பமாக ஆராய்ந்தவர்; ஆங்கிலத்தில் பதினாறுக்கும் மேல் கட்டுரைகள் எழுதியவர். கவிமணியின் "காந்தளூர்சாலை" என்ற ஆங்கிலக் கட்டுரை சான்றாதாரம், பின்னிணைப்பு, வரைபடங்களுடன் வந்திருக்கிறது (1939).


திருவனந்தபுரத்தில் இருந்தபோது (1901-1931) கல்வெட்டாய்வாளராகவும் இருந்தார். இக்காலத்தில் இவர் எழுதிய 28 தமிழ்க் கட்டுரைகள் நூல் வடிவில் வந்துள்ளன. Malabar Quarterly Review, People's Weekly, People's Opinion, The Western Star, Kerala Society Papers இதழ்களில் எழுதிய 19 கட்டுரைகள் நூல் வடிவில் வரவில்லை. இவற்றிலும் 4 கட்டுரைகளை அடையாளங்காண முடியவில்லை.

20-ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் வெளிவந்த கல்வெட்டு மூலப்படிவங்களின் விளக்கங்களில் உள்ள தவறுகளைச் சுட்டிய இவரது கட்டுரைகள் முக்கியமானவை. வரலாற்றுப் பேராசிரியரான கே.கே.பிள்ளை "தொடக்ககாலக் கல்வெட்டு ஆராய்ச்சியாளர்களில் குறிப்பிடத்தகுந்தவர்கள் கே.ஏ. நீலகண்டசாஸ்திரி, வி.ஆர். இராமச்சந்திர தீட்சிதர், கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை" ஆகியோர் என்கிறார்.















காணொளிகள்

01] **கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை | தமிழ் அறிஞர்களும் தமிழ்த் தொண்டும்**
https://www.youtube.com/watch?v=bFwgei_LPCw [9:34]

02] **கவிமணி தேசிக விநாயகனார் பற்றிய முக்கிய வினாக்கள்**
https://www.youtube.com/watch?v=KAGMSi6NwYM [12:43]


03] **மங்கையாராகப் பிறப்பதற்கே - நல்ல மாதவஞ் செய்திட வேண்டும், அம்மா! 🌻கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை!**
https://www.youtube.com/watch?v=5ivnMH7Ihfg [6:04]

(😊)(😊) **கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை** (😊)😊)

எளிமை, இனிமை, தெளிவு இவர்தம் நூல்களின் தனிச்சிறப்புகளாகும்.

கவிமணியின் தமிழ்ப்பணி

— ஒரு மதிப்பீடு



பேராசிரியர் முனைவர்

ந சுப்பு ரெட்டியார்



1916 2016

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publication

கவிமணியின் தமிழ்ப்பணி

ஒரு மதிப்பீடு

பேராசிரியர் முனைவர் **ந சுப்பு ரெட்டியார்**



எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

கவிமணி காட்டும் இயற்கைக் காட்சிகளையும்,
படிமக் காட்சிகளையும் வரலாற்றுப் போக்கிலும்,
ஒப்பீட்டு முறையிலும் தமக்கே உரித்தான
முறையில் பேராசிரியர் திறனாய்ந்து
படைத்த ஓர் ஒப்பற்ற நூல்

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publications

ISBN: 978-81-939317-5-2



eBOOK ~ *மின் நூல்*

கவிமணியின் தமிழ்ப்பணி

ஒரு மதிப்பீடு

அருங்கலைக்கோன், சடகோபன் பொன்னடி, சேவா ரத்னா,
தமிழ்ப்பேரவைச் செம்மல், கலைமாமணி, ஆய்வுத்தமிழரசு,
பொதுமறைச் செம்மல், வைணவ இலக்கிய மாமணி

பேராசிரியர் முனைவர்

ந சுப்பு ரெட்டியார்

முன்னாள் வாழ்நாள் மதிப்பியல் பேராசிரியர்

தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்





1916 2016

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publications

கவிமணியின் தமிழ்ப்பணி - ஒரு மதிப்பீடு

முதற்பதிப்பு – 2002
இரண்டாம் பதிப்பு - 2018

PRICE: Rs.365.oo

Published by:

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publications

AD-13, 5th Street, Anna Nagar West, Chennai – 600 040

ISBN 978-81-939317-5-2

9 788193 931752

Wrapper design: **Centenary Committee**
Printed at: DJ Prints, Chennai – 600 095

சென்னைப் பல்கலைக் கழகம்

தமிழ் இலக்கியத் துறை



திரு. மு. சண்முகம் பிள்ளை (அமரர்)

திருக்குறள் இருக்கைப் பேராசிரியர்

சென்னைப் பல்கலைக் கழக
தமிழ் இலக்கியத் துறை - திருக்குறள்
இருக்கைப் பேராசிரியர்
என் நெடுநாள் நண்பர்
திரு. **மு. சண்முகம் பிள்ளை** அவர்கட்கு

அன்புப் படையல்

இலக்கணக் கடலின் கரைகண்ட செம்மல்;
இணையற்ற தேவியின் தொண்டர்;
துலக்குசீர் வையா புரியின் நல்லன்பர்;
தூய்மையார் வாய்மையார்; என்றும்
நலக்குரித் தாய மர்ரேயின் நண்பர்;
நாவலர் பாவலர் பெருமான்;
புலக்குரித் தூய சண்முகம் பிள்ளை
பொற்பினுக் குரியதிந் நூலே [1]

தேவி - தேசிக விநாயகம் பிள்ளை

அணிந்துரை

(பேராசிரியர் முனைவர் இராதா செல்லப்பன்)

பேராசிரியர் ந. சுப்புரெட்டியார் அவர்கள் தமிழகத்தின் மூத்த தமிழறிஞர். நூறு நூல்களுக்கு மேல் படைத்து உலவ விட்ட பெருமைக்குரியவர். அவர் தொடாத துறைகள் இல்லை. பல்வேறு துறைகளில் ஆழங்காற்பட்டு தமிழ் ஆய்வு வளர்ச்சியில் தம்முடைய முத்திரையை நன்கு பதித்த பேரறி ஞர். தம்முடைய 87ஆவது அகவையிலும் ஓயாது உழைத்துத் தமிழன்னைக்குப் பல்வேறு நூல்களைக் காணிக்கையாக்கி உள்ளார். அவருடைய படைப்புச் சாதனையில் இப்பொழுது முகிழ்ந்துள்ளது "**கவிமணியின் தமிழ்ப்பணி - ஒரு மதிப்பீடு** " என்னும் நூல்.

கலை வேறு; அறிவியல் வேறு என்ற கருத்து மாறி இரண்டும் ஒன்றாகக் கை கோர்த்து நடக்கும் காலமிது. திறனாளிகள் அறிவியல் ணுகுமுறைகளைக் கொண்டு இலக்கி யத்தை ஆராய்வர். இலக்கியத் தோற்றமும் வளர்ச்சியும் அதன் போக்கும் சில பொதுவான கொள்கைகளுக்கு உட்பட் டவை. அப் பொது .ண்மைகளை அறியும் ஆர்வம் கிளர்ந்தெ ழுந்ததன் விளைவே இந்நூல். இந்நூலின்கண் ஆசிரியர் கவிமணி பல்வேறு கால கட்டங்களிலும் எழுதிய பாக்களைத் தொகுத்துப் பல்வேறு தலைப்புகளில் வகைப்படுத்தி ஆராய்ந்து தந்துள்ளார் நூலாசிரியர். கவிமணி காட்டும் இயற்கைக் காட்சிகளையும் படிமக் காட்சிகளையும் வரலாற் றுப் போக்கிலும் ஒப்பீட்டு முறையிலும் தமக்கே உரித்தான முறையில் திறனாய்ந்துள்ளார் பேராசிரியர்.

கவிஞரின் குழந்தைப் பாடல்களை நுணுகி ஆராய்ந்து கருத்தளிக்கிறார் பேராசிரியர். ரூசோவின் எமிலி என்ற நூல்தான் புதிய கல்வி முறைகளுக்கான வித்து என்று கூறும் அவர் பெஸ்டலாஸ்ஸி, ஃப்ராபெல் முதலான மேனாட்டறிஞர்

பேராசிரியர் மற்றும் துறைத் தலைவர், தமிழியல் துறை, பாரதிதாசன் பல்கலைக் கழகம், பல்கலைப் பேரூர், திருச்சிராப்பள்ளி - 620 024. (தொ.பே.0431 - 660358)

களின் கல்விக் கொள்கைகளை எளிமையாக எடுத்துக் கூறுகிறார். அவர்கள் கொள்கைகள் மூலமாகக் குழந்தைக் கல்வி முறைகளைக் கூறுகின்றனர். கவிமணியின் குழந்தைப் பாடல்களோ கற்பித்தல் முறைக்குச் செயல்முறை வடிவம் கொடுக்கு மாற்றினை விளக்குகிறார்.

கவிமணியின் கவிதைகளில் வெளிப்படும் தேசபக்தி உணர்வைப் பாரதியார், பாரதிதாசன் ஆகியோரது உணர்வுகளோடு ஒப்பிட்டு ஆராய்ந்து கூறுகிறார். விடுதலைக்காகப் பாடுபட்டோர் மிதவாதிகள் தீவிரவாதிகள் என்ற இரு வகையாகப் பிரிந்து செயல்பட்டனர். பாரதியாரின் கவிதைகளில் தீவிர தேசபக்தக் கனல் வீசுவதை எடுத்துக்காட்டும் பேராசிரியர் பாரதிதாசனைப் பற்றிக் கூறும்போது ''பாரதிதாசன் கவிதைகளில் நாட்டுப்பற்று இல்லாமலில்லை. ஆனால், சமூக நீதிகளைக் கண்டிக்கும் போக்கும் தந்தை பெரியாரின் கருத்துக்களும்தான் அவர் பாடல்களில் தலைதூக்கி நிற்கின்றன'' என்று திறனாய்கிறார். கவிமணியைப் பற்றிக் கூறும்போது ''கவிமணி வாழ்ந்த சூழ்நிலை காரணமாக இவர்தம் பாடல்கள் நாட்டுப்பற்றின் இனிய மணம் கமழ்வதாக அமையவில்லை. ஆனால், நாட்டுப்பற்றிற்குரிய பொருள்களை இவர் பாடவே இல்லை என்று கருதவும் முடியாது'' என்ற கருத்துரைக்கிறார். தேசக்கொடியின் சிறப்பு, கதர் விற்பனை, வட்ட மேசை மாநாடு முதலான தலைப்புகளில் பாடி அவரும் தேசிய நீரோட்டத்தில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டவராக அமைந்து விடுகின்றார். கவிமணியவர்கள் சுதந்திரப் போராட்டத்தில் கலந்து கொள்ளவில்லை என்றும் சுதந்திரம் பற்றி அவர் பாடிய இரு பாடல்களுமே சுதந்திரம் பெற்றபின் பாடப் பெற்றவையே என்ற செய்தியையும் தருகிறார்.

கவிஞரின் கடவுள் கொள்கையை ஆராய்கின்ற பேராசிரியர் தாயுமான சுவாமிகள், குமரகுருபரர் ஆகியோரின் கருத்துக்கள் இவர்தம் பாடல்களில் காணப்படுகின்றன என்ற கருத்தைத் தெரிவிக்கிறார். கவிஞரின்,

கோவில் முழுதும் கண்டேன் - உயர்
கோபுரம் ஏறிக் கண்டேன்
தேவாதி தேவனையான் - தோழி!
தேடியும் கண்டிலேன்

என்று தொடங்கி காணாமைக்குரிய காரணத்தையும் அவ னைக் காணும் முறையையும் விளக்குவதை எடுத்துக்காட்டுகி றார் பேராசிரியர்.

கண்ணுக் கினியன கண்டு - மனத்தைக்
    காட்டில் அலையவிட்டு
பண்ணிடும் பூசையாலே - தோழி
    பயனொன் றில்லை, அடி
உள்ளத்தில் உள்ளான், அடி!அதுநீ
    உணர வேண்டும்.அடி!
உள்ளத்தில் காண்பாய்எனில் - கோயில்
    உள்ளேயும் காண்பாய்,அடி!

என்று கடவுளை ஆரவாரமின்றி கருத்தை ஒருநிலைப்படுத்தி நினைக்க வேண்டும் என்று கவிஞர் கூறும் நயம் சிறப்பாக உள்ளது. கலைமகள் பற்றிக் கவிஞுமணி பாடியுள்ள பாடல் குமரகுருபரரின் சகலகலாவல்லிப் பாடல்களையும் கம்பனின் சரசுவதி அந்தாதிப் பாடல்களையும் விஞ்சும் முறையில் அமைந்துள்ளது என்று பாராட்டிக் கூறுகிறார் பேராசிரியர் (ப.56) கவிமணி வடமொழியைத் தழுவி எழுதிய மீராபா யின் பாடல்களை அன்பொழுகும் அற்புதக் கவிதைகள் என்று கூறிக் களிக்கிறார் பேராசிரியர். அந்தப் பாடல் நிகழ்ச்சிகளை தமிழிலுள்ள பக்திப் பாடல்களில் உள்ள நிகழ்ச்சிகளோடு ஒப்பிட்டு வருணிப்பது மிகவும் சுவை பயப்பதாக அமைந்துள் ளது. மீரா அளித்த நைவேத்தியத்தை கண்ணன் விக்கிரகம் ஏற்றுக்கொண்ட செய்தி பேராசிரியருக்குக் கண்ணப்பநாய னார் குடுமித் தேவரைத் தம் நைவேத்தியத்தை உண்ணச் செய்ததையும் நம்பியாண்டார் நம்பி பொல்லாப் பிள்ளையா ரைக் கொழுக்கட்டையை உண்ணச் செய்ததையும் நினைவுக் குக் கொண்டு வருகிறது. மீரா முக்தியடைந்த நிலையை ஆண்டாளின் முக்தி நிலையோடும் திருப்பாணாழ்வார் முக்தி நிலையோடும் ஒப்பிட்டுக் காட்டி மகிழ்கிறார். புத்தர் பெரு மான் வரலாற்றைக் கூறும் ஆசிய ஜோதியைப் பற்றித் திற னாய்வு செய்யும் பேராசிரியர் அக்கவிதைகளில் தம்மையே இழந்து உணர்ச்சிப் பெருக்கோடு கவிதை நயம் காட்டுகிறார். தாம் அனைத்திந்தியக் கீழ்த்திசை மாநாட்டில் கலந்து கொள்ள வாரணாசி சென்றபோது புத்த கயைக்குச் சென்றதையும் அவ்வமயம் கவிமணியின் ஆசிய ஜோதிக் கவிதைகள் அவர் மனக்கண் முன்னே குமிழியிட்டதை உணர்ச்சி பொங்கக்

காட்டுகிறார் பேராசிரியர். அவ்விடங்களிலெல்லாம் மானசீக மாகப் புத்தர் பெருமானைத் தரிசிக்க அவர்தம் புனித வரலாற்றை உணரக் கவிமணியின் கவிதைகள் அவ்விடங்களிலெல்லாம் தம் மனக் காதுகளினால் கேட்டுக் களித்த நிலையை நயம்பட நம்மிடம் பகிர்ந்து கொள்கிறார் பேராசிரியர் அவர்கள்.

பாரதியும் பட்டிக்காட்டானும் என்ற தலைப்பில் அமைந்த கவிமணியின் கவிதையை ''கவிதைத் திறனாய்விற்குக் கவிதையாலேயே திறனாய்ந்த அற்புதத் திறனாய்வுக் கவிதை இது. பின்னோர்க்கெல்லாம் இது ஒரு கலங்கரை விளக்கம் போல் அமைந்து என்றும் நின்று வழிகாட்டும் சிறந்த ஓர் இலக்கியமாகும்'' என்று உவந்து பாராட்டுகிறார் பேராசிரியர்.

சுந்தரமூர்த்தி வழியில் என்ற இயலில் இயலுக்கான பெயர்க் காரணத்தை தருகிறார் பேராசிரியர். தேவாரத்தில் திருத்தொண்டத் தொகையைப் பாடி அடியார் வழிபாட்டைத் தொடங்கி வைத்தவர் சுந்தரமூர்த்தி நாயனார். தொடர்ந்து நம்பியாண்டார் நம்பி திருத்தொண்டர் அந்தாதி பாடினார். அந்தப் பாதையைப் பின்பற்றி பாரதியாரும் பாரதிதாசனாரும் பல்வேறு அறிஞர்கள், தொண்டர்கள் முதலானோரைப் பற்றிப் பாடினர். அம் மரபை அடியொற்றிக் கவிமணியும் வாழ்த்துப் பாடல்களாகவும் இரங்கற் பாக்களாகவும், போற்றும் முறையிலும் பாடல்களை அமைத்துள்ளனர். கவிமணியின் இப்பாடல்களைப் பற்றிய செய்திகள் இடம் பெறும் இவ்வியலுக்குச் சுந்தரமூர்த்தி வழியில் என்று பேராசிரியர் பெயர் சூட்டியுள்ள முறை சுவையூட்டுவதாக அமைந்துள்ளது. கவிமணி பல அறிஞர்களைப் போற்றிப் பாடியுள்ளார். பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளையவர்களும் கவிமணியும் இணை பிரியாத தோழமையுணர்வுடன் பழகியவர்கள். கவிமணியின் நூல்கள் பலவற்றைப் பேராசிரியர் வையாபுரிப் பிள்ளையின் முன்னுரை அணி செய்திருக்கிறது. தம்முடைய படைப்புகள் பெரும்பாலானவற்றைப் பிள்ளையவர்களிடம் படித்துக் காட்டிய பிறகே அவற்றை அச்சு வாகனம் ஏற்றியவர் கவிமணி. பிள்ளையவர்களைப் பற்றி அவர் ஒரு சிறிய பாடல் கூடப் படைக்கவில்லை என்பது வியப்பான ஒரு செய்தி. ஒரு சமயம் ஒரு நண்பர் கவிமணியிடம் நீங்கள் உங்கள் அன்பிற்கும் மதிப்பிற்குரிய வையாபுரிப் பிள்ளையவர்களைப் பற்றி ஒரு பாடல் கூடப் புனையவில்லையே என்று கேட்டாராம்.

அதற்குக் கவிமணியோ ''நான் வேறு பிள்ளையவர்கள் வேறு அல்ல; அவரைப் பற்றி நான் பாடலெழுதுவது என்னைப் பற்றி நானே பாடுவது போலாகுமே. அதனால் தான் நான் அவ்வாறு பாடலியற்றவில்லை'' என்று பதிலிறுத்தாராம்.

சமூகநலச் சிந்தனைகள் என்ற இயலிலே கவிமணியின் சமூக நோக்கை நன்கு வெளிப்படுத்துகிறார் பேராசிரியர். சமுதாய ஒற்றுமை, சாதி வேற்றுமை, தீண்டாமைக் கொடுமை, பெண்கள் நிலை, தொழிலாளர் நிலை, பிச்சைக்காரர் நிலை எனப் பல்வேறு கருத்துக்களின் அடிப்படையில் கவிமணியின் பாடல்களை ஆராயும் பேராசிரியர் தக்க இடங்களில் பாரதியார் பாடல்கள், பக்தி இலக்கியப் பாடல்கள் முதலியவற்றோடு ஒப்பிட்டுக் காட்டி நயம் பாராட்டியுள்ளது மிகச் சிறப்பாக அமைந்துள்ளது. பண்பாட்டுக் கூறுகளைப் பற்றிப் பேசும்போது, கவிமணி நிலைமையாமையைப் பற்றிப் பாடல்களில் விளக்கியிருப்பது போல வேறு எங்கும் தமிழிலக்கியத்தில் காண முடியாது என்பதை ஆணித்தரமாகக் கூறுகிறார். கவிமணியின் மக்கட் பண்புக் கோட்பாட்டினை விளக்கும் போது, குதிரையின் புலம்பலாகக் கவிமணி தரும் பாடல்களைப் பேராசிரியர் எடுத்துக் காட்டியிருப்பது அந்த இயலுக்குப் பொருத்தமாக அமைந்துள்ளது. இயற்கையை நன்கு அனுபவித்துப் பாடிய புலவன் கவிமணி. அந்த உணர்வினைத் தம் திறனாய்வின் மூலம் நமக்குப் பேராசிரியர் அளிக்கிறார் என்றால் அது மிகையாகாது. கவிமணியின் மருமக்கள் வழி மான்மியம் என்ற படைப்பு அங்கதச் சுவை நிறைந்த அருமையான ஒரு படைப்பு. நாஞ்சில் நாட்டில் வழக்கிலிருந்த மருமக்கள் வழித் தாய் முறையைக் கண்டித்து எழுதப் பெற்ற ஒரு படைப்பு. இதனைப் பற்றிப் பேராசிரியர் கூறும் போது, ''மருமக்கள் வழி மான்மியம் என்ற சமுதாய ஓவியம் ஒரு நூதன இலக்கிய வகையைச் சார்ந்தது. இலக்கியம் வாழ்க்கையின் திறனாய்வு என்பர். இக்கூற்றினை விளக்குவது போல் கவிமணியின் இந்தச் சொல்லோவியம் அமைந்துள்ளது (பக்.224). கதைதைய ஓர் அபலையின் வாயில் வைத்துக் கவிமணி பேசுவது அற்புதமாக அமைந்துள்ளது (பக்.241). இந்தக் காவியம் நாஞ்சில் நாட்டு மருமக்கள் வழி மக்களின் வாழ்க்கையின் கண்ணாடியாகத் திறனாய்வுப் போக்கில் அமைந்துள்ளது தெளிவு (பக்.224)'' என்று தெளிவுபடுத்துகிறார் கவிமணியின் பாடல்களில் அமைந்துள்ள படிமங்கள்

பயில்வோர் மனத்தில் தோன்றி கவிதையனுபவத்தைக் கிளர்ந்தெழச் செய்கின்றன என்றும் அவை படிப்போரைக் கவிதையனுபவத்தின் கொடுமுடிக்குக் கொண்டு செலுத்துகின்றன என்றும் கருத்து தெரிவிக்கும் பேராசிரியர் கவிமணி கையாண்டுள்ள படிமங்களை நன்கு வெளிப்படுத்தியுள்ளார். இப்படிமக் காட்சிகள் நம் மூளையில் பதிந்து முருகுணர்ச்சியாக மாறுவதை அறிவியல் பூர்வமாகவும் விளக்குகிறார் பேராசிரியர்.

கவிஞரின் மொழிக் கொள்கையை ஆராய்கின்ற பேராசிரியர் ''நூல் முழுவதும் கையாளப்பெறும் வட்டார வழக்குச் சொற்கள் காவியத்தை இயல்புடைத்தாக்குகின்றன. எடுத்துக்காட்டாக ஏகாங்கி, கண்டாங்கி, குலுக்கை, களரி கட்டுதல், மலரணை முதலிய பல சொற்களைக் காட்டுகிறார். கல்லாதாருக்கும் விளங்கும் சொற்களைப் பயன்படுத்துகிறார். பெரும்பாலும் கதாபாத்திரங்களே பேசுவதாக இயற்றுவது அவரது வழக்கமாக உள்ளது என்கிறார் ஆசிரியர். இதுகாறும் மேற்கூறிய கவிதைகளால்... இவருடைய தமிழ் என்றும் உள்ளத்தில் போற்றி வைக்கத்தகும் பொற்களஞ்சியம். நமது மூதாதையரின் பண்பாட்டிலும் மரபிலும் ஊறித் தோய்ந்து இனிமை முற்றிய தமிழ், உண்மை நிரம்பிய தமிழ், கல்லார்க்கும் கற்றார்க்கும் நாட்டார்க்கும் நகரத்தார்க்கும் ஒன்றுபோல நலம் இனளிக்கும் தமிழ் (பக்.263) என்ற மதிப்பீடு பேராசிரியரின் நுண்மாண் நுழைபுலத்தைக் காட்டுவதாக அமைந்துள்ளது.

''சாந்தலிங்கத் தம்புரான் தண்ணீரில் மிதந்து வந்த காகிதக் கப்பலைக் கையில் எடுத்துப் படித்துப் பார்த்து அதிசயித்துப் போனார். அழகழகான முத்து முத்தான எழுத்தில் தமிழ்ப் பாடல்கள் அதில் எழுதியிருந்தன... என்ன ஆச்சரியம்! சின்னச் சின்ன வார்த்தைகளில் புரியக் கூடிய தமிழில் எழுதியிருந்த அந்தப் பாடல்கள் அவருக்குப் பெரிய சந்தோஷத்தை உண்டாக்கிற்று... ஆச்சரியத்தோடு எதிர்க்கரையைப் பார்த்த தம்புரானுக்கு ஒரே வியப்பு! அச்சிறுவனை அழைத்து விவரம் கேட்க, அவன் எழுதிய பாட்டுத்தான் அது என அறிந்து வியந்து போகிறார் தம்புரான். தம்பி! என் மடத்துக்கு வா! உனக்கு நான் தமிழ் சொல்லித் தருகிறேன்!'' என்று குகன் பெரும்புள்ளிகள் என்ற தமது நூலில் கூறுகிறார். அச்சிறுவன் தான் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை. அவருடைய தமிழை அவருடைய கவிதைகளை இன்னும் சொல்லப்

போனால் அவருடைய படைப்புகளை ஆழமாகக் கண்டு தனது திறனாய்வுப் பார்வையால் அடையாளம் காட்டுகிறார் பேராசிரியர் சுப்பு ரெட்டியார் அவர்கள். அவருடைய இத் திறனாய்வு நூல் ஒப்பீட்டு முறையில் அமைந்த திறனாய்வாகத் திகழ்கிறது. கவிமணியுடன் பாரதியாரை, பாரதிதாசனை, நாமக்கல் கவிஞரை ஒப்பிட்டுக் காட்டுகிறார். கவிமணியின் பாடல்களைப படிக்கும் போது பேராசிரியருக்குத் தேவார மும், ஆழ்வார் பாசுரங்களும் கண்முன்னே தோன்றுகின்றன. பேராசிரியரின் ஆசிய ஜோதியைப் பற்றிய மதிப்பீடு நம் கண்முன் புத்த கயையைக் கொண்டு வந்து காட்டுகிறது. கவிமணியின் கவிதைகளை ஒப்பிட்டு முறையில் நடுநிலை யில் நின்று திறனாய்ந்து நல்லதொரு திறனாய்வு நூலினைப் படைத்தளித்த பேராசிரியருக்குத் தமிழ் உலகம் குறிப்பாகத் தமிழ்க் கவிதை உலகம் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறது என்றால் அது மிகையன்று.

— இராதா செல்லப்பன்

நூல் முகம்

கானல்நீர் விழைந்த மான்என உலகக்
கட்டினை நட்டுழன்று அலையும்
ஈனவஞ் சகசெஞ் சகப்புலை யேனை
ஏன்றுகொண் டருளும்நாள் உளதோ
ஊனம்ஒன்று இல்லா உத்தமர் உளத்தே
ஓங்குசீர்ப் பிரணவ ஒளியே
வேல்நவில் கரந்தோர்க் கினியவா சித்தி
விநாயக விக்கினேச் சுரனே (11) [1]

சங்கம்வளர்த் திடவளர்ந்த தமிழ்க்கொடியைச்
சரசுவதி தன்னை அன்பர்
துங்கமுறக் கலைபயிற்றி உணர்வளிக்கும்
கலைஞானத் தோகை தன்னைத்
திங்கள்நுதல் திருவைஅருட் குருவைமலர்
ஓங்கியபெண் தெய்வந் தன்னைத்
தங்கமலை முலையாளைக் கலையாளைத்
தொழுதுபுகழ் சற்று நிற்பாம் [2]

— **இராமலிங்க வள்ளல்**

என் வாழ்நாளில் கல்லூரி வாழ்க்கை தொடங்கி என் மனத்தை அதிகமாக ஈர்த்தது அறிவியல்; அஃது இன்றும் தொடர்ந்து நடைபெறுகின்றது. 1941 ஜூன் முதல் நாள் தொடங்கி துறையூரில் புதிதாகத் தொடங்கப் பெற்ற உயர்நிலைப் பள்ளி முதல் தலைமையாசிரியர் பணியை ஏற்ற நாள் முதல் மக்கள் உணர்வைக் கல்வியின்பால் ஈர்க்கச் செய்வதற்குத் துணையாயிருப்பதற்கு உதவுவது மக்கள் பேசும் மொழி தமிழ் என்பதனை உணர்ந்தேன். நான் உயர்நிலைப் பள்ளி மாணவனாக 5,6ஆம் படிவங்களில் பயின்றபோது தமிழ் கற்பித்த இரு தமிழாசிரியர்கள் ஊட்டிய, உறங்கிய நிலையிலிருந்த தமிழுணர்வு இப்பொழுது கிளர்ந்தெழத் தொடங்கியது.

1. திருஅருட்பா - மூன்றாம் திருமுறை - சித்தி விநாயகர் பதிகம் - 11.
2. மேலது - மேலது - கலைமகள் வாழ்த்து - 2

சிறுவனாகிய என் கவனத்தை காந்தியடிகளின் வாழ்க்கை ஈர்த்தது. 1932ல் நான் முசிறியில் 5ஆம் படிவ மாணவனாக இருந்தபோது ஒரு சில மாணவர்களுடன் திருச்சி வந்த காந்தியடிகளைப் பார்க்க வந்து திருச்சி தேசிய கல்லூரி வளாகத்தில் அப்பெருமானைக் கண்டு மகிழ்ந்தேன். 1942 ஆகஸ்டு புரட்சி என் மனத்தை ஈர்த்தது. குறைந்த தமிழறிவுள்ள நான் பாரதியின் பாடல்களில் ஆழங்கால் பட்டேன்.[3] 1943 முதல் தந்தை பெரியாரிடம் ஈடுபாடு கொண்டு நேரில் பழகியவனாதலால் சுயமரியாதை இயக்கம் என்னை ஈர்த்தது. பாவேந்தர் பாடல்களில் ஆழங்கால் பட்டு அநுபவித்தேன். 1948இல் பாவேந்தரை ஒரு வாரம் விருந்தினராக என் இல்லத்தில் தங்க வைத்து அவருடன் அளவளாவி மகிழ்ந்தேன். அவர்தம் தீவிர கொள்கை எனக்கு உடன்பாடு இல்லாத போதிலும், அவர்தம் பாடல்கள் என் உள்ளத்தை ஈர்த்ததால் அவர்தம் நூற்றாண்டு விழாவில் அவர் பாடல்களைப் பற்றி மூன்று திறனாய்வு நூல்களை எழுதி முடித்தேன்.[4]

இதற்கிடையில் புதுமைப் பதிப்பகம் ''மலரும் மாலையும்'' என்ற தேசிக விநாயகம் பிள்ளையின் பாடல்களை வெளியிட்டது (1944 மூன்றாம் பதிப்பு). சத்துவகுணம் மிக்க எனக்கு சத்துவ குணமே வடிவாகவுள்ள பிள்ளையவர்களின் பாடல்கள் மிகவும் இனித்தன. பன்முறைப் படித்துப் படித்து மகிழ்ந்தேன். காரைக்குடி சென்றதும் (1950 சூலை முதல்) டி.கே.சி.யின் தொடர்பும் அவர்தம் பாடல்களைப் பற்றி அதிகமாக மேடைகளில் பேசிவந்த பேராசிரியர் ஆ.முத்துச்சிவம் தொடர்பும் ஏற்பட்டதால் மேலும் அவர்தம் பாடல்களில் ஈடுபாடு அதிகமாயிற்று. திருப்பதி சென்ற பிறகு தே.வி.யின் பாடல்களை தமிழ் எம்.ஏ.க்குரிய பாடத் திட்டத்தில் சேர்ந்து கற்பிக்கும் வாய்ப்பையும் பெற்றேன். அவர்தம் அனைத்துப் பாடல்களையும் கொண்ட பாரி நிலைய வெளியீடு (சனவரி, 1967) எனக்குக் கிடைத்தது. இப்பதிப்பு மிகவும் பயனுள்ளதாக அமைந்தது.

3. பிற்காலத்தில் பாரதி நூற்றாண்டு விழா நினைவாக பாரதியின் பாடல்களைப் பற்றி நான்கு திறனாய்வு நூல்களை வெளியிட்டு மகிழ்ந்தேன்.
4. ஒன்று அப்பொழுது வெளிவந்தது; இரண்டு இப்பொழுது (2002) வெளிவருகின்றன.

உலகத் தமிழ் மாநாடு (எட்டாம் அமர்வு) தஞ்சையில் நடைபெற்றபொழுது அதில் தே.வி.யின் பாடல்களைப் பற்றி ஆய்வுக் கட்டுரை வழங்கினேன். தொடர்ந்து **'கவிமணியின் தமிழ்ப் பணி - ஒரு மதிப்பீடு'** என்ற தலைப்பில் எழுதி முடித்தேன் (1995). அதன் கைப்படியைப் பெற்று திரு. ப.முத்துக்குமாரசாமி அவர்களின் பரிந்துரையால் கலைஞன் பதிப்பகம் மூலம் வெளிவருகிறது. வெளியிட்டவருக்கும் 'புருஷகாரம்' செய்தவருக்கும் மிக்க நன்றி.

நான் இன்று நன்னிலையிலிருப்பதற்கு இறையருளும் (விநாயகர், முருகன், ஏழுமலையான்) நான்கு பெரியவர்களின்[5] ஆசிகளும் காரணம் என்பது என் அதிராத நம்பிக்கை.

இந்த நூலுக்கு அணிந்துரை வழங்கிய **டாக்டர் (திருமதி) இராதா செல்லப்பன்** (பேராசிரியர், துறைத் தலைவர், பாரதிதாசன் பல்கலைக் கழகம், திருச்சி) பேராசிரியர் எஸ்.வையாபுரிப் பிள்ளை அவர்களின் அருமைப் பேத்தியாவார். பாட்டனாரின் எல்லா நற்குணங்களும் மொழி இலக்கியப் புலமையும் கைவரப் பெற்றவர். என்பால் மதிப்பும் மரியாதையும் கொண்ட இப்பெருமாட்டி இந்நூலுக்கு அணிந்துரை அருளியது இந்நூலின் பேறு; என் பேறும் கூட. அணிந்துரை வழங்கிய அன்பருக்கு என் இதயங்கலந்த நன்றி.

பேராசிரியர் மு. **சண்முகம்பிள்ளை** அவர்கள் பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளையவர்களின் அருமைச் சீடர். பருந்தும் அதன் நிழலும்போல் அப்பெருமகனாரிடம் ஒட்டிக் கொண்டிருப்பவர். பிள்ளையவர்களின் அருங்குணங்களனைத்தும் மெய்ப்புகள் (Proofs) திருத்தும் திறனும் இவரிடம் அமைந்தன. பல்லாண்டுகள் சென்னைப் பல்கலைக் கழக திருக்குறள் இருக்கையை அலங்கரித்திருந்தவர். சத்துவ குணம் மிக்க சீலர். என்பால் மிக்க மதிப்பும் மரியாதையும் கொண்டவர். கவிமணியின்பால் பெருமதிப்பு கொண்டவர். தம் இல்லத்திற்குக் 'கவிமணியின் இல்லம்' என்று பெயரிட்டு

5. **திரு.வி.க. 1934 முதல் அவர் மறையும் வரை தவத்திரு சித்பவாநந்த அடிகள் (1943 முதல் அவர் தம் பூத உடல் நீங்கும் வரை); பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை (1944 முதல் அவர் மறையும் வரை); தந்தை பெரியார் (1944 முதல் அவர் மறையும் வரை)**

வழங்கியவர். கவிமணியின் கவிதைகளிலும் மிக்க ஆழங் கால் பட்டவர். இத்தகைய உழுவலன்பருக்கு இந்நூலை அன்புப் படையலாக்கிப் பெருமிதம் கொள்ளுகின்றேன்.

இந்நூல் அச்சேறும்போது மூல படியைப் பார்வை படிக ளுடன் ஒப்பிட்டு சரி பார்க்கவும், மெய்ப்புகளைக் கவனத்து டன் திருத்தவும் எனக்கு உதவிய என் அபிமான புத்திரி டாக்டர் மு.ப.சியாமளாக்கு என் அன்பு கலந்த ஆசிகள் என்றும் உரியவை.

இந்நூல் எழுதவும், வெளியிடவும் (காலங்கடந்த போதி லும்) எனக்கு எல்லா வகையிலும் அருள் சுரந்த என் நெஞ்சில் நிலையாக எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் ஏழுமலை யான் இணையடித் திருத்தாமரைகட்கு எண்ணற்ற சரணாகதி வணக்கங்கள் - புருஷகாரபூதையின் மூலம்.

பொன்னிலும் மணிகளிலும் - நறும்
பூவிலும் சாந்திலும் விளக்கினிலும்
கன்னியவர் நகைப்பினிலும் - செழுங்
காட்டிலும் பொழிலிலும் கழனியிலும்
முன்னிய துணிவினிலும் - மன்னர்
முகத்திலும் வாழ்ந்திடும் திருமகளைப்
பன்னிநற் புகழ்பாடி - அவர்
பதமலர் வாழ்த்திநற் பதம் பெறுவோம் (1)[6]

— பாரதியார்

'வேங்கடம்'
AD-13 அண்ணாநகர்
சென்னை - 600 040
15.07.2002

ந. சுப்பு ரெட்டியார்

6. பா.க. தோ.மா. திருமகளைச் சரண்புகுதல்

உள்ளுறை